Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
உள்நாட்டு வெளிநாடுகளுக்கான சகல
விதமான துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S. ROAD, JAFFNA T.P - 021 2222670
FAX - 222 3214 email - del - smskr@eureka.lk
(சி-2015)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 12 (05.01.2004) திங்கட்கிழமை இதழ் :96

# அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 இல் நடத்தப்படும்!

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இரண்டாவது தடவையாக 1999 ஆம் ஆண்டு டிசம்பரில் தெரிவு செய்யப்பட்டு 1999 டிசம்பர் 22 ஆம் திகதி ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டபோதும், இரகசியமாக மீண்டும் 2000 நவம்பரில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்திருந்தார்.

அது தொடர்பான தகவல்கள் வெளியான பின்னர், 2006 ஆம் ஆண்டுவரை பதவியில் இருக்க ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருந்தன.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இது குறித்து கருத்து வெளியிடுகையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது குறித்து தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பார். அப்படி அவர் தீர்மானிக்காவிட்டால் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை நாடலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், நீதி அரசியலமைப்பு விவகார

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பேச்சு நடத்தவருமாறு சந்திரிகா அழைக்கின்றார்!

(கொழும்பு)

மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணிலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெறும் 12 ஆவது சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு செல்ல முதல் ஜனாதிபதியால் பிரதமருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி இந்த அழைப்பில் மேலும் தெரிவிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் ஒரு சுற்றுப்பேச்சுவார்த்தைக்கு வருமாற நான் அழைப்புவிடுக்கின்றேன். இதன் மூலம் கூட்டு சமாதானச்செயலணி குழுவை உருவாக்கி சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்லலாம்.

அத்துடன் கடந்தகால போட்டி அரசியல் மனப்பான்மையை மறப்பதற்கு நான் தயாராக உள்ளதுடன், சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்ல பிரதமர் ரணிலுடன் இணைந்த பணியாற்றவும் தயாராகவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் ரணிலுடன் சேர்ந்து உருவாக்கவுள்ள கூட்டு சமாதானச்செயலணிக் குழுமூலம் ஜனாதிபதி, பிரதமர் ரணிலுக்கு சில கூடுதல் அதிகாரங்களை ஜனாதிபதி வழங்கவுள்ளதாகவும் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் ஜனாதிபதியால் முன்னரும் ஒரு முறை கூட்டுச்செயலணி குழுவை உருவாக்குவது தொடர்பாக கருத்து தெரிவித்தபோதும், அதனை ஐக்கிய தேசிய முன்னணி அரசு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுத பலம், ஆயுத கொள்வனவு குறித்து

# கொழும்பு வந்த பிரெஞ் இராணுவ நிபுணர் படையதிகாரிகளுடன் கலந்தாலோசனை

(கொழும்பு)

**பிரெஞ் இராணுவ நிபுணர் ஒருவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்து முப்படை அதிகாரிகளுடனும் ஆலோசனைகளை நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**வெடிபொருட்கள் மற்றும் சர்வதேச ஆயுத தளபாட உற்பத்தி சம்பந்தப்பட்ட பிரெஞ் இராணுவ நிபுணரே கொழும்புக்கு வந்ததாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.**

இந்த விஜயத்தின்போது, பிரெஞ் இராணுவ நிபுணர் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பாகவும், புலிகள் பயன்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பாகவும் படையதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு ஆயுத விற்பனை நிறுவனங்களுடனும் தொடர்புடையதான இந்தப் பிரெஞ் நிபுணர், புலிகளின் புதிய ஆயுதக் கொள்வனவு முயற்சிகள் தொடர்பான சில தகவல்களை வெளியிட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில்- புலிகள், உயர்சக்தி வாய்ந்த கிளஸ்ரர் குண்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு கட்டளைகளை வழங்கியிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச ரீதியில் போரில் பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட இந்தக் குண்டுகளை ஆஜென்ரீனாவில் கொள்வனவு செய்யப் புலிகள் முயற்சிசெய்வதாகவும்,

'பாக் ஓடினறி' என்ற நிறுவனத்திற்கே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் பலி!

(வவுனியா)

வவுனியா புட்டகாடுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அஜந்தன் (வயது 25) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

வவுனியா பட்டகாடுப் பகுதியில் ஆலய வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை அவரைத் தொடர்ந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவர் கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

சூட்டுக்கு இலக்காகி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவரை வீதியால் வந்தவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள தமிழ்,முஸ்லிம், சிங்களப் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று முதல் ஆரம்பமாகின்றன.

இந்தப் பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக கடந்த வருடம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதியுடன் மூடப்பட்டன.

தமிழ், சிங்களப் பாடசாலைகள் அடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவுக்காக சீனா சென்ற படை அதிகாரிகள் குழு நாடு திரும்பியது!

(கொழும்பு)

முப்படையினருக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான பரிசோதனைகளுக்காக சீனாவுக்குச் சென்ற மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா தலைமையிலான உயர் மட்டப் படையதிகாரிகள் குழு நாடு திரும்பியுள்ளது.

ஒருவார காலத்துக்கு மேலாக சீனாவில் தங்கியிருந்த இந்த இராணுவ அதிகாரிகள் குழு, தொலை தூர ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது.

முப்படை அதிகாரிகள் குழுவின் சீன விஜயத்துக்கான ஒழுங்குகளை அந்த நாட்டு அரசுக்குச் சொந்தமான நொறிங்கோ என்ற ஆயுத விற்பனை நிறுவனமே மேற்கொண்டிருந்தது.

இதேவேளை - நொறிங்கோ நிறுவனத்துக்கு எந்தவிதமான கேள்விப் பத்திரம் கோரும் நடைமுறையும் இன்றி குறிப்பிடத்தக்களவு ஆயுதங்களை விநியோகிக்கும் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மிதிவெடியில் சிக்கிய பெண் இடது காலை இழந்தார்!

கைவிடப்பட்ட இராணுவ காவலரணுக்கு அண்மையில், பனையோலை எடுக்கச்சென்ற பெண் மிதிவெடியில் சிக்கியதில் இடதுகாலை இழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 6.30 மணியளவில் பழையவீதி கோப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் செல்வம் (வயது 56) என்ற பெண்ணே தனது இடதுகாலை இழந்தவராவர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது-

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு புதிய தலைவர் நியமனம்

(திருகோணமலை)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தின் புதிய தலைவராக கேட்ஸ்பர் பதவி ஏற்றுள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட தலைவராகச் செயற்பட்டு வந்த அதில் புக்கான் தாயகம் திரும்பியதை அடுத்தே, பிரதித் தலைவராகப் பணியாற்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கு நியமனம்வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணத்தில் 2003 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடாத்தப்பட்ட மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோக பயிற்சிநெறியில் கலந்து கொண்டவர்களுக்கான நியமனம் இது வரை வழங்கப்படவில்லை.

மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோக பயிற்சிநெறியில் கலந்து கொண்டு அந்த பயிற்சியின் இறுதியில் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரீட்சை முடிவுகள் கிடைக்கப்பெற்றும், அந்தப் பரீட்சையில் சித்தியடைந்த 8 பேருக்கும் அதற்குரிய நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதேவேளை, ஒரே காலத்தில் பரீட்சையில் சித்தியடைந்த களுத்துறை மாவட்டத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வேறுபாடும் புறக்கணிப்பும் தொடர்பாக கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டிய பொறுப்பு உரியவர்களுக்கு இருக்கவேண்டுமென பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

# வெளிநாடுகளுக்கு ஆட்களை அமைச்சர்கள் அனுப்புகின்றனர்

## சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு

போலிக் கடவுச்சீட்டுக்களை பயன்படுத்தி ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பெருமளவு பணத்திதை மோசடி செய்யும் சம்பவங்களுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சர்கள் சிலர் தொடர்புபட்டிருப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

இது குறித்து பொலிஸ் தலைமையக உயர்அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடு[illegible]ரில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களின் தலையீடுகள் காரணமாக சட்டவிரோதமாக ஆட்கள் அனுப்பும் சம்பவத்துடன் தொடர்புடைய அமைச்சர்களை கைதுசெய்ய முடியாது எனத்தெரிவித்ததாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## சலன சித்திர நிர்வாகத்தெரிவு

சலன சித்திரம் - யாழ்ப்பாணம் அமைப்பின் 2 ஆவது வருடாந்த மாநாடும் 2004 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தெரிவும் கடந்த 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில், சம்மேளன நிதிச் செயலாளர் சி.கஜிலசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, தலைவராக பொன்.பூலோகசிங்கம், பொதுச் செயலாளராக மோ.ஷாந்தன் சத்தியகீர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நேர்முகத்தேர்வு இன்றாகும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார்.

இந்த நேர்முகப்பரீட்சைகள் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இடம்பெறவுள்ளன. காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை இடம்பெறவுள்ள இந்த நேர்முகத் தேர்வுகளில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் தோற்றவுள்ளார்கள்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசிய வர்த்தக கற்கைநெறி, தேசிய ஆங்கில டிப்ளோமா முதலான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களே இந்த நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (25)


நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

சூர்யா, ஜோதிகா நடித்த

காக்க காக்க

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

KEOMA

(சி-2004)


## சிறு விளம்பரம்

### தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-2006)


ராஜா யாழ்ப்பாணம்.

8 ஆம் திகதிவரை

விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா

நடித்த

திருமலை

காட்சிநேரம் :

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2005)



## பணி நிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளிற் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.01.12 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

**தகைமைகள்**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரணதரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.

02. அகவை : 18 - 40 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**
நாள்: 2004.01.12
நேரம்: காலை 10.00 மணி
இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்விற்கு ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

ஆளுகை,
சந்தைப்பகுதி, யாழ்.மாவட்டம். (574)



## மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மலிவுவிற்பனை தை 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றனர் லைடன் புடவை நிலையத்தினர்.

சகல பொருட்களுக்கும் விசேட கழிவு அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

**லைடன் புடவை நிலையம்**

(பஸ் நிலையம் எதிர்)

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222381

(சி-2016)



அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு

# மாபெரும் மகளிர் தேசிய விளையாட்டு விழா

## தமிழீழத்தின் பெண்கள் மட்டுமே முதன் முதலாக பங்கெடுக்கும் போட்டிகள்....

### தங்கப் பதக்கங்களை வெல்ல...




1. 100 மீற்றர் ஓட்டம்
2. நீளம் பாய்தல்
3. 200 மீற்றர் ஓட்டம்
4. உயரம் பாய்தல்
5. 400 மீற்றர் ஓட்டம்
6. ஈட்டி எறிதல்
7. 800 மீற்றர் ஓட்டம்
8. தட்டெறிதல்
9. 1, 500 மீற்றர் ஓட்டம்
10. முப்பாய்ச்சல்
11. 3, 000 மீற்றர் ஓட்டம்
12. தடை தாண்டல் (கேடில்ஸ்)
13. 04X100 மீற்றர் ஓட்டம்
14. 04X400 மீற்றர் ஓட்டம்

இவற்றுடன்....

❖ சைக்கிள் ஓட்டம் ❖ மரதன் ஓட்டம் ❖ கிளித்தட்டு ❖ கரப்பந்து

ஆகிய போட்டிகளில் கலந்துகொள்ளுங்கள்...

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரிகள் -

1. யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினர்
2. பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள்
3. கோட்ட, பிரதேச அரசியல் துறை செயலகங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்...

❖ 15.01.2004 வரை அனைத்து வயது பெண்களிடமிருந்தும் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வம் மிக்க அனைத்து வீராங்கனைகளையும் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை:
வலி-வடக்கு
மாதர் சங்கங்களின் சமாசம்.

அரசியல்த்துறை - மகளிர்
தமிழீழ விடுதலைப் புலிகள் - வலிகாமம் கோட்டம்.

(சி-2029)

# கரையோரப் பாதுகாப்பு சேவை; பலப்படுத்துவதற்கு நடவடிக்கை

## கடத்தலைக் கட்டுப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் கரையோரப் பாதுகாப்புச் சேவை அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. கண்காணிப்புப் படையுடன்கூடியதான முழுமையான ஆயுதங்கள் உட்பட, அனைத்து வசதிகளையும் கொண்ட கருவிகள் பொருத்தப்பட்ட கப்பல்மூலம் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கும், உயிர்காப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கான ஹெலிகொப்டர் வசதிகளை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நிலப்பரப்பில் பணியாற்றும் கரையோரக் காவல்படையினருக்கு தரையில் ஒடும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களுடன் ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை கடலிலும், தரையிலும் பணி புரியும் கரையோரக் காவல்படையினருக்கு ஆயுதப்பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கரையோரப் பாதுகாப்புப் படையில் பொலிஸார், கடற்படையினர் மற்றும் ஆயுதப்படையினர் இணைந்து பணியாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

அத்துடன் கரையோரப் பாதுகாப்புப் படையின் ஆளணி எண்ணிக்கையான 164 அதிகாரிகள் என்ற நிலையிலிருந்து அதிகரிக்கப்படவிருக்கிறது.

வடமேற்கில் புத்தளம், தென்கிழக்கில் கிரிந்த மற்றும் கல்முனை, திருகோணமலை ஆகியவை அடங்கிய இரு பிரிவுகள் என கரையோரப் பாதுகாப்பு படைகள் இயங்கி வருகின்றன.

மேலும் கரையோரப் படைவசம் சிறிய படகுகளே உள்ளன. இதனால் ஆறு 55 நீளமுடைய கண்ணாடியிழைக் கலங்களையும் மேலும் கண்ணாடி இழைப் படகுகளையும் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

---

சமாதான நடவடிக்கைகள் குறித்து

## மக்களுக்கு தெளிவுபடுத்தும் திட்டம் ஆரம்பமானது!

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக, மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை அநுராதபுர மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இந்தக் கருத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் மத்தியில் சமாதான செயற்பாடுகள் தொடர்பான தெளிவில்லாத நிலை உருவாகியுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு நாம் சமாதான செயற்பாடுகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். இதன் முதற்கட்ட செயற்பாடு நேற்றுமுன்தினம்களுத்துறையில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

மக்களுக்கு சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சில் உள்ள முக்கிய சிக்கல் தொடர்பாகவும், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு தடையாகவுள்ள காரணி பற்றி சிறப்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஈஸ்டன் பஸ் கம்பனி ஊழியர் வேலைநிறுத்தம்

களுவாஞ்சிக்குடி நியூஈஸ்டன் பஸ் கம்பனி ஊழியர்கள் நடத்தும் வேலைநிறுத்த போராட்டத்தால் அந்த டிப்போவில் இருந்து சேவையில் ஈடுபட்டிருக்கும் பஸ்சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 110 ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தமக்கு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே இந்தப்போராட்டத்தை இவர்கள் நடத்திவருகின்றனர்.

இதேவேளை, குறிப்பிட்ட 110 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய அளவிற்கு தம்மிடம் பஸ்கள் இல்லையென்றும் இதனால் 8 லட்சம் ரூபா அளவில் நட்டம் ஏற்படுவதாகவும், இந்த நடடத்தைச் சமாளித்து ஊழியர்களுககு சம்பளத்தை கொடுக்க முடியாது உள்ளது என்றும் - எனவேதான நவம்பர், டிசம்பர் மாத சம்பளங்களை கொடுக்கமுடியாது இருந்ததாகவும் முகாமைத்தும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

---

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கட்சிபேதமின்றிச் செயற்படவேண்டும்!

ஜனாதிபதி சந்திரிகா பொலிஸாருக்கு அறிவுரை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு - பொலிஸார் கட்சிரீதியற்ற, மத ரீதியற்ற முறையில் பணிகளில் ஈடுபட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு அறிவுரை வழங்கினார்.

நாட்டில் பல்வேறு இடங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்துவருகின்றன. 2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2003 ஆம் ஆண்டில் குற்றச்செயல்கள் அதிகமாயிருக்கின்றன.

இதில் முக்கியமானது குற்றச்செயல்களில் 45 வீதமானவையே மாகாணங்களில் இடம் பெற்றவை. இவ்வாறான குற்றச்செயல்களைத் தடுக்க வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலிஸார் உரிய முறையில் செயற்பட்டு குற்றச்செயல்களைத் தடுக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கிடையே உரிய பதவியுயவர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொலிஸாருக்கு அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்படும் பல்வேறு அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியினர் ஆட்சியில், அரசுக்கு எதிராக செயற்படுகிறவர்கள் மீது இடமாற்ற உத்தரவுகள் போன்ற நடவடிக்கைள் இடம்பெற்றுவந்தன. ஆதரவாகச் செயற்பட்டவர்கள் அரசாங்க உயர் பதவிகள் வகித்ததோடு பல்வேறு குற்றச்செயல்களுக்கும் காரணமாக இருந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலைமை இனிவரும் காலங்களில் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

மதங்களுக்கிடையிலான பதற்றநிலை

## மாகாண, மாவட்ட மட்டத்தில் சமாதானக் குழுக்கள் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் மதங்களுக்கிடையிலான பதற்றத்தைத் தணிப்பதற்காக மாவட்ட, மாகாண மட்டத்திலான - அனைத்து மதத்தலைவர்களையும் உள்ளடக்கிய சமாதானக் குழுக்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் புத்தசாசன அமைச்சின் செயலாளர், இந்து சமய விவகார, முஸ்லிம் சமய விவகார, கிறிஸ்தவ மத விவகார அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பிரட்மன் வீரக்கோன் மதங்களுக்கிடையிலான பதற்றத்தைத் தணிப்பதற்கு அரசாங்கம் சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறினார். தொடர்ந்தும் இத்தகைய கலந்துரையாடல்களை நடத்துவதெனவும் இந்த கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

---

## கடற்படை உயரதிகாரிகள் அடுத்தமாதம் இடமாற்றம்!

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் உயர் மட்ட அதிகாரிகள் மத்தியில் அடுத்தமாதம் முதல் இடமாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

தற்போது வடபகுதிக்கான கடற்படைத் தளபதியாக இருக்கும் றியர் அட்மிரல் நந்தன துடுவெவத்த, இரத்மலானையிலுள்ள சேர் ஜோன் கொத்தலாவல - பாதுகாப்பு அக்கடமியின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார்.

இவருக்குப் பதிலாக வடபகுதி கடற்படைத் தளபதியாக றியர் அட்மிரல் தயானந்த தர்மப்பிரிய நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக பணியாற்றிவரும் றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட - கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட மேற்குக் கடற்பிராந்தியத் தளபதியாகப் பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போது மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக இருக்கும் றியர் அட்மிரல் சரத் ரத்ன கீர்த்தி-திருகோணமலையைத் தலைமையகமாகக் கொண்ட கிழக்குப் பிராந்தியத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## பைக்கற் உப்பினைப் பயன்படுத்துமாறு உணவுக்கட்டுப்பாட்டுச்சபை கோரிக்கை

(கொழும்பு)

மக்களின் வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு உப்பினை பைக்கற்றில் அடைத்து விற்குமாறு சுகாதார அமைச்சின் உணவுக்கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் எஸ்.நாகையா - உற்பத்திசெய்பவர்களையும், விற்பனையாளர்களையும் கேட்டுள்ளார்.

அத்துடன் இவ்வாறு விற்பனை செய்வதன்மூலம் நுகர்வோர் அசுத்தமான உப்பினைக் கண்டுபிடித்து விடுவார்களெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இவ்வளவு காலமும் ஒரு கிலோ உப்பிற்கு 25 தொடக்கம் 30 மில்லி கிராம் அயடின் சேர்க்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 15 தொடக்கம் 30 மில்லிகிராமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது மனிதனின் உடம்பிற்குப் போதுமான அளவெனத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் உப்பு உற்பத்தி செய்பவர்களைக் கட்டாயமாக உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து அனுமதி பெற்றிருக்கவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## ரயில் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

ரயில் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரசபை அறிவித்திருக்கிறது.

இலங்கை ரயில்வே அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எவ்.யூ.கே.பெர்ணாண்டோ இது குறித்து தகவல் வெளியிடுகையில் -

குறுந்தூர ரயில் கட்டணங்கள் 60 சதவீதத்தாலும், நீண்டதூர ரயில் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னரே ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

ரயில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பது குறித்து ஒரு வாரத்துக்கு முன்னரே பொதுமக்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது. கடந்த வருடம் ரயில் கட்டணங்களை சிறியளவில் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் அளிக்க மறுத்துவிட்டது.

புதிய கட்டண விகிதத்தின் அடிப்படையில் - கொழும்பிலிருந்து நீர்கொழும்பு, அவிசாவளை, அளுத்கம, பொல்காவெல ஆகிய இடங்களுக்கான ரயல் கட்டணங்கள் 60 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த இடங்களுக்கு அப்பால் தூர இடங்களுக்கான ரயில் கட்டணங்கள் 40 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னர் ஆகக்குறைந்த கட்டணமாக ரூ 2.50 இலிருந்து தற்போது 4 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் ரயிலில் பிரயாணச்சீட்டுப்பெறாமல் பயணம் செய்வோர் மீதான குற்றப்பணமும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்றாம் வகுப்புக் குற்றப்பணம் ரூ 200 இலிருந்து ரூ 500 ஆகவும், இரண்டாம் வகுப்புக் குற்றப்பணம் ரூ 300 இலிருந்து ரூ 750 ஆகவும், ரூ 400 ஆக இருந்த முதலாம் வகுபபுக் குற்றப்பணம் 1000 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

## தேரோ மரணம் குறித்து உயர்மட்ட விசாரணை!

(கொழும்பு)

கங்கொடவில சோமதேரர் ரஷ்யாவில் மரணமான சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்றை மேறகொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவிடம் லங்கா சமசமாஜக் கட்சி கோரிக்கை விடுத்திருக்கிறது.

லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே, பொலிஸ்மா அதிபருக்கான இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

---

## ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு பிரதமர் அலுவலகத்தில் பதவி!

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய ஒஸ்ரின் பெர்ணாண்டோ - பிரதமர் அலுவலகத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு விவகாரங்களைக் கையாளும் பிரிவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்ற பின்னர், ஒஸ்ரின் பெர்னாண்டோ - அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதையடுத்தே பிரதமர் அலுவலகத்தில் இந்தப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது.

தமது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், ஒஸ்ரின் பெர்ணாண்டோ - பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் சகிதமாக கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்சபை தலைமையகத்தில் பொலிஸார் திடீர் தேடுதல்!

ஆவணங்கள் பல சிக்கின

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமையகத்தில் விசேட பொலிஸார் குழு நேற்றுமுன்தினம் திடீர் தேடுதலை நடத்தியதுடன், அங்கிருந்த சில ஆவணங்களையும் தடுத்து வைத்துள்ளது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மூலம் பாதாள உலகத் தலைவர் ஒருவருக்கு நிதி வழங்கப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டு குறித்து நடத்தப்பட்டுவரும் விசாரணைகளின் ஒரு கட்டமாகவே இந்தத் தேடுதல் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து சி.ஐ.டி பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில் - தற்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளுடன் தொடர்புடைய முக்கிய ஆவணங்கள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் நடத்தப்பட்ட தேடுதலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தன.

## விளையாட்டு அபிவிருத்திக்கு இந்த வருடம் முன்னுரிமை!

அமைச்சின் பணிப்பாளர் மில்ரன் அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பல விளையாட்டுக்கள் இந்த வருடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்திருக்கிறது.

விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் மில்ரன் அமரசிங்க இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் - மாவட்ட ரீதியில் அஞ்சலோட்டங்களை மேம்படுத்துவதற் காகப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும்.

அத்துடன் நான்கு வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் இதற்காக நியமிக்கப்படவுள்ளார்கள். சர்வதேச தரத்திற்கு நாட்டின் விளையாட்டைத் தரமுயர்த்தவுள்ளதாகவும், இந்த வருடம் பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்

# விமர்சனங்களைப் பற்றி கவலை அடைவதில்லை

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



(சிட்னி)

விமர்சனங்களைப் பற்றி நான் கவலைப் படுவது கிடையாது என்று டெண்டுல்கர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு முழுவதும் 5 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 153 ஓட்டங்களைப் பெற்ற டெண்டுல்கர், நேற்றுமுன்தினம் ஒரேநாள் ஆட்டத்தில் இந்த சாதனையை முந்தினார். சாதனைகள் பலவற்றை மாற்றி எழுதிய டெண்டுல்கர் ஆட்டம் முடிந்த பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். சந்தோசம் பொங்கிய முகத்துடன் காணப்பட்ட டெண்டுல்கர், இப்போது எந்தப் பதட்டமும் இல்லை என்றார்.

முந்தைய மோதல்களில் சரியாக ஆடமுடியவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். இது தொடர்பாக அணியில் உள்ள மூத்த வீரர்களிடம் நான் அறிவுரை கேட்டேன். அதுமட்டுமின்றி - ஆட்டத்தின்போது லக்ஸ்மண் எனக்கு நல்ல அறிவுரைகள் வழங்கினார். என்னதான் சரியாக ஆடினாலும், எதிர்முனையில் இருக்கும் வீரருக்குத்தான் நாம் செய்யும் தவறுகள் தெரியும். முந்தைய ஆட்டங்களில் தேவையில்லாத பந்துகளைத் தொட்டு ஆட்டம் இழந்துள்ளேன். இந்தமுறை பந்தை தேர்வு செய்வதில் அதிக கவனத்துடன் இருந்தேன். விக்கெட்டிற்கு வெளியே வீசப்பட்ட பந்தை நான் கண்டுகொள்ளவே இல்லை. 10 மணி நேரம் ஆடியபோதும் நான் களைப்படையவில்லை என்று டெண்டுல்கர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் - மோசமாக ஆடிய காலத்தில் எனக்கு ஆறுதலாக இருந்தவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். என் மீது வீசப்பட்ட விமர்சனங்களைப் பற்றி நான் கவலைப்படுவது கிடையாது. நான் ஒரு விசயத்தை கண்டிப்புடன் கடைப்பிடித்து வருகிறேன். சமீப காலமாக நான் எந்த செய்தித்தாள்களையும் படிப்பது கிடையாது. நாளையும் (அதாவது இன்று) பேப்பர் படிக்கப்போவது கிடையாது. என்னுடைய இந்த சதத்தை எனக்கு ஊக்கம் அளித்த அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன் என்றார்.

இதேவேளை, 30 பவுண்டரிகளுடன் 178 ஓட்டங்கள் எடுத்த லக்ஸ்மன் தனது சதத்தை ஓய்வு பெறப்போகும் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவோவிற்கும், தனது ஆட்டத்தை நேரில் கண்டுரசித்த பெற்றோருக்கும் சமர்ப்பணம் செய்கிறேன் என்று கூறினார்.

### ஒருநாள் போட்டிக்காக

# யுவராஜ்சிங், பதானி, பங்கர் அவுஸ்திரேலியாவுக்கு பயணம்

(சென்னை)

அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில இடம்பிடித்துள்ள பதானி, யுவராஜ்சிங், பங்கர் ஆகியோர் நேற்றுமுன்தினம் சென்னையிலிருந்து அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றனர்.

விளையாட்டு

டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் இந்தியா, சிம்பாப்வே உட்பட 3 அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ளது. ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ள பதானி, யுவராஜ்சிங், பாங்கர் ஆகியோர் நேற்று சென்னையில் இருந்து அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றனர். டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் ரமேஷ், ஆகாஷ் சோப்ரா, தாஸ் குப்தா மற்றும் காயத்தால் அவதிப்பட்டுவரும் சகீர்கான் ஆகியோர் தாயகம் திரும்பவுள்ளனர். அவுஸ்திரேலியாவில் ஓட்டங்கள் எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக தமிழக ஆட்டக்காரர் ஹேமங்பதானி நிருபர்களிடம் தெரிவித்தா.

# பாலோ ஒன்னைத் தவிர்ப்பதற்கு போராடும் அவுஸ்ரேலிய அணி

(சிட்னி)

சிட்னியில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கெதிரான நான்காவதும், இறுதியானதுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஆறு



விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களை எடுத்தநிலையில் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளதோடு பாலோ ஒன்னைத் தவிர்க்க இன்னமும் 163 ஓட்டங்களை எடுக்க வேண்டிய கட்டாய நிலையிலும் உள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 650 ஓட்டங்களை எடுத்திருந்தது. நேற்றுக்காலை ஆட்டத்தை தொடங்கிய இந்திய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 705 ஓட்டங்களை எடுத்தநிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இந்திய அணிசார்பில் சோப்ரா 45, ஷேவாக் 72, சச்சின் ஆட்டமிழக்காமல் 241, லக்ஷ்மன் 178, பட்டேல் 62 கூடிய ஓட்டங்களைப் பெற்றனர். இதில் பார்த்தீவ் பட்டேல் 50 பந்துகளை எதிர்கொண்டு 62 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய அணி சார்பில் பிரட்லீ 4, கிலெஸ்பி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்கள். இதில் பிரட்லீயின் பந்துவீச்சை இந்தியத் துடுப்பாட்டக்காரர்கள் அடித்து நொருக்கினார்கள். பிரட்லீ 39.3 ஓவர்கள் வீசி 201 ஓட்டங்களைக் கொடுத்தே 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்து ஆடத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹைடனும், லாங்கரும் ஒருநாள் போட்டிபோல ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இதன் பின்னர் கும்பிளேயின் பந்துவீச்சில் அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வீரர்கள் சுருண்டனர்.



இதில் ஹைடன் 67, லாங்கர் 117, பொண்டிங் 25, மார்ட்டின் 7 ஓட்டங்களுடன் கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ஸ்ரீவோ 49, கில்கிறிஸ்ட் 6 ஓட்டங்களுடன் இர்பான் பதானின் பந்துவீச்சில் ஆட்



டமிழந்தனர். தற்போது ஹட்ரிச் 51 ஓட்டங்களுடனும், பிரட்லீ ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பாலோனைத்தவிர்க்க அவுஸ்ரேலிய அணி 505 ஓட்டங்களை எடுக்கவேண்டும். பொதுவாகவே அவுஸ்ரேலிய மைதானங்கள் பிரட்லீ போன்ற வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதென்றே கணிக்கப்பட்டது. ஆனால் அதனை இந்திய துடுப்பாட்ட வீரர்கள் உடைத்துவிட்டனர்.

அத்துடன் வெளிநாடுகளில் இந்தியா எடுத்த அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முதல் 1986 ஆம் ஆண்டு கான்பூரில் இலங்கைக்கு எதிராக 676 ஓட்டங்கள் எடுத்ததே இந்தியாவின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். அந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போதய அவுஸ்ரேலிய டெஸ்ட் அணித்தலைவர் ஸ்ரீவோ பதவியேற்ற பின்னர் அவுஸ்ரேலிய அணி சந்திக்கும் மிகவும் நெருக்கடியான நிலையும் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிற்போக்கு சக்திகளை முறியடிக்க ஒன்றுபடுவோம்

## கருணாநிதி தெரிவிப்பு



(சென்னை)

தி.மு.க. கூட்டணியில் இதுவரை 7 கட்சிகள் சேர்ந்தன. கருணாநிதி - சுர்ஜித் பேச்சில் உடன்பாடு, பிற்போக்கு சக்திகளை முறியடிக்க ஒன்றுபடுவோம், தி.மு.க. அணியில் பா.ம.கவும் சேரும் கருணாநிதி நம்பிக்கை.

கூட்டணி குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் பேசுவதற்காக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் ஹர்கிசன்சிங் சுர்ஜித், நேற்றுமுன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை சென்று, நேற்றுக் காலை 9 மணிக்கு கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதியின் வீட்டுக்குச் சென்றார். அவருடன் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில செயலாளர் என். வரதராஜனும், டி.கே.ரங்கராஜனும் வந்திருந்தார்கள்.

பலம் வாய்ந்த தி.மு.க. அணி தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகிய அதேவேகத்தில் தமிழக அளவில் முற்போக்கு கூட்டணி ஒன்றை அமைக்க தி.மு.க. தீவிர நடவடிக்கையில் இறங்கியது. காங்கிரஸ் தலைவர் சோனியா - கருணாநிதியை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதைத் தொடர்ந்து தி.மு.க. அணியில் காங்கிரஸ் இணைவது உறுதியாகிவிட்டது.

ம.தி.மு.க. - இந்திய கம்யூனிஸ்ட் ஆகியவை தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இணைவோம் என்று ஏற்கனவே அறிவித்திருந்தன. சுர்ஜித்-கருணாநிதி இடையேயான நேற்றைய சந்திப்பைத் தொடர்ந்து, மார்க்சிய கம்யூனிஸ்ட்டும் தி.மு.க. அணியில் இணைவது உறுதியானது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்கள் நேற்று கருணாநிதியை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் அந்தக் கட்சியும் தி.மு.க. அணியில் சேருகிறது. இஸ்லாமியர்களின் மற்றொரு கட்சியான இந்திய தேசிய லீக்கின் பொதுக்குழு திருச்சியில் கூடி தி.மு.க. அணியில் சேருவது என முடிவெடுத்தது.

தற்போதைய நிலவரப்படி தி.மு.க.வின் முற்போக்கு கூட்டணியில் 7 கட்சிகள் இடம்பெற்று பலம்வாய்ந்த அணியாக திகழ்கிறது. தி.மு.க. அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் வருமாறு:-

1. தி.மு.க. 2. காங்கிரஸ் 3.மார்க்சிய கம்யூனிஸ்ட் 4. இந்திய கம்யூனிஸ்ட் 5. ம.தி.மு.க. 6. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 7. இந்திய தேசிய லீக்.

### டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில்

# ஒன்பதாயிரம் ஓட்டங்களை லாராவும் நேற்றுக் கடந்தார்!

தென்னாபிரிக்காவிற்கு எதிராக கேப்டவுனில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 361 ஓட்டங்களை எடுத்ததுடன் பாலோ ஒன்னையும் தவிர்த்துள்ளது. அத்துடன் அணித் தலைவர் லாரா 9 ஆயிரம் ஓட்டங்களையும் கடந்துள்ளார்.



178 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது 6 விக்கெட்டுக்களை நேற்று இழந்தது.

தற்போது மொத்தமாக ஏழு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 361 ஓட்டங்களுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆடிக்கொண்டிருக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல், 79 பந்துகளில் தனது சதத்தைப் பூர்த்தி செய்தது சிறப்பம்சமாகும். கைல் 116, சர்வான் 44, அணித் தலைவர் லாரா ஆட்டமிழக்காமல் 94 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களை எடுத்தபோதும், மற்றைய நான்கு வீரர்களும் 25 இற்குக் குறைவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்க அணியின் சார்பில் நெல் 4 விக்கெட்டுக்களையும், பொலக், நிற்னி, கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 532 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பௌச்சர் 122, றுடோல்ப் 101 ஓட்டங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்

## கைத்தொழில் அமைச்சிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக, முற்றாக அழிந்துபோன அச்சுவேலியில் இருந்த தொழிற்பேட்டையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என, யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கத் தலைவர் பிரதமரையும், கைத்தொழில் அமைச்சரையும் கோரியுள்ளார்.

சங்கத் தலைவர் எஸ். பத்மநாதன் தொழிற்பேட்டை சம்பந்தமாக அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

குடாநாட்டு மக்களின் நன்மை கருதி, கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன்பு, அச்சுவேலி தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பாரிய, சிறிய அளவிலான 31 கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வந்ததுடன், பெருந்தொகையான இளைஞர்கள் வேலை செய்து வந்தார்கள். இதனால், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நன்மையடைந்தன.

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மேற்படி தொழிற்பேட்டை மூடப்பட்டது.

அங்கிருந்த கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலையிலிருந்த இயந்திர சாதனங்கள் எல்லாம் முற்றாக அழிக்கப்பட்டன.

இதனால், அங்கு தொழிற்சாலைகளை நடத்திவந்தவர்களுக்குப் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதுடன், இளைஞர்களும் வேலை வாய்ப்பை இழந்துள்ளார்கள். இதனால், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்க்கை நடத்தமுடியாமல் கஷ்டப்படுகின்றன.

தற்பொழுது நாடு அமைதிச் சூழலை நோக்கிச்செல்கிறது. சமாதான காலத்தைத் தொடர்ந்து மக்களும் சற்று நிம்மதியுடன் வாழ்ந்து வருகிறார்கள். குடாநாட்டு மக்களின் வருமானத்தையும், பொருளாதாரத்தையும் கருத்திற்கொண்டு, அச்சுவேலித் தொழிற்பேட்டையை மீண்டும் ஆரம்பிக்க முன்வரவேண்டும்.

பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு கடன் அடிப்படையில் நிதி உதவிசெய்து, தொழிலை ஆரம்பிக்க ஆவன செய்யவேண்டும். இதனால், பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வருமானத்தைப் பெறுவதுடன், வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

எனவே, குடாநாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக, அச்சுவேலி தொழிற்பேட்டையை மீள ஆரம்பிக்குமாறு எமது சங்கம் கேட்டுக்கொள்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் - மகளிர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் பாடசாலை மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவது வழக்கம்.

இந்தமுறையும் பாடசாலை ஆரம்பிக்கும்போது, வறிய மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளது. தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் பெயர், கற்கும் தரம் என்பவற்றை அனுப்பிவைக்குமாறு இந்த நிலையத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (52)

### கால்கோள் விழா

2004 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் ஆண்டு ஒன்று மாணவர்கள் அனுமதிக்கான கால்கோள் விழா - எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்தப்பட இருப்பதாகவும், அன்றையதினம் இந்தவிழாவில் கலந்துகொள்ளவுள்ள உத்தியோகத்தர்களினது பெயர் விபரங்களைத் தீவகக் கல்விவலயம் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளது. (52)

## அரைநாள் சம்பளத்துடன் பணியாற்றும் வடகடல் நிறுவனத்தின் தொழிலாளர்கள்

வடகடல் நிறுவனத்தின் தொழிலாளர்கள் - கடந்த சில வருடங்களாக, அரைநாள் சம்பளத்தில் வெளியே வேலையின்றி உள்ளனர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

1990 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்ட சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு, புல்முல்லக் குழுவினரின் தீர்மானங்களிற்கு அமைவாக - 1991 ஆண்டில நிறுவனத்தின் 161 தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கத் தீர்மானக்கப்பட்டது.

நஷ்டஈட்டைப்பெற, 26 தொழிலாளர்கள் எதிர்ப்புத்தெரிவித்தனர். இவர்களுக்கு அரைநாள் சம்பளம் வழங்க இணக்கம் காணப்பட்டது. 2000 ஆம் ஆண்டு சிநோர் அபிவிருத்தி நிறுவனம் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தபோதும்-

2002.10.02 திகதிமுதல் இது வடகடல் நிறுவனமாகப் புனர்வாழ்வு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டு, தொழிலாளர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்தத் தொழிலாளர் உள்வாங்கலில் - ஏற்கனவே நஷ்டஈடு பெற்றவர்களுடன், அரைநாள் சம்பளம் பெற்றுத்தர நாலுபேரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இந்த 4 பேர் உள்ளிட்ட ஏனைய 11 பேர் இன்று வரை அரைச்சம்பளம் பெற்றுவருகின்றனர்.

இவர்கள் நிரந்தரத் தொழிலாளர்கள் ஆகையால், தமக்கான தொழில உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இரண்டுவருட காலத்தில் நஷ்டஈடு பெற்றவர்களுடன், புதியவர்களும் தொழிலாளர்களாக உள்வாங்கப்பட்டமையால், கடந்த 12 வருடங்களாக அரைநாள் சம்பளம் பெற்றுவரும் அனுபவமும், தகுதியும் உடைய நிரந்தர தொழிலாளர்கள் வெளியே வேலையின்றி உள்ளனர். இது தொடர்பாக, தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிவருவதாக, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். (91)

### இந்து கலாசார அமைச்சினால்

## வீடமைப்புத்திட்ட விண்ணப்பங்கள் 18 ஆம் திகதிவரை ஏற்கப்படமாட்டாது

இந்துசமய அலுவல்கள் அமைச்சினால், கடந்தமாதம் 18 ஆம் திகதி தொடக்கம் வீடமைப்புத் திட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களின் பிரகாரம் - ஏராளமான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இவையனைத்தையும் பூரணப்படுத்திய பிற்பாடே, புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமயகலாசார அலுவல்கள் அமைச்சினால் - நவாந்துறை, பொம்மைவெளி, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில புதிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வீட்டுத் தொகுதிகளில் ஒன்றுக்கு - படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் பெயர் சூட்டப்படவுள்ளது.

கல்லுண்டாய் பகுதியில் அமைகக்கப்பட்ட ஒன்பது வீடுகளும், அண்மையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த வீட்டுத் தொகுதிகளுக்கு திருவாவடுதுறை கிராமம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மலசலகூட வசதிகள் உரியமுறையில் ஏற்படுத்திக் கொடுக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ச)

### பெரியவிளான், முள்ளானை

## கிராம அலுவலர் பிரிவுகள் விவசாய கிராமங்களாக பிரகடனம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான், முள்ளானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் - சமுர்த்தி அதிகாரசபையின் செயற்திட்டத்தின்கீழ் விவசாய நிலங்களாக பிரகடனப்படுத்தப் படவுள்ளன.

மேற்படி இரு கிராம அலுவலர் பிரிவுகளையும், சமுர்த்தித்திட்டத்தின் விவசாய கருத்தினூடாக, விவசாயக் கிராமமாக பிரகடனப்படுதுவதற்கான பூர்வாங்க வேலைத்திட்ட ஏற்பாடுகள் - பண்டத்தரிப்பு, சமுர்த்தி வங்கியினூடாகவும் அந்தப் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களூடாகவும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதன் அடிப்படையில் அந்தப் பகுதியிலுள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை, அதில் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை, மொத்த நிலப்பரப்பு, விவசாய நிலப்பரப்பு, பயிரிடப்படும் பயிர்களின் வகை என்பன சம்பந்தமான விபரங்களை உத்தியோகத்தர்கள் திரட்டிவருவதாகவும், அந்த நடவடிக்கை வெற்றியளித்தால் இவ்விரு கிராம அலுவலர் பிரிவுகளும் சிறந்த பொருளாதார வளம்மிக்க கிராமங்களாக மாறும் எனவும், இதற்காக சமுர்த்தி அதிகாரசபை பல இலட்சம் ரூபா செலவிட தயாராகவிருப்பதாகவும தெரிவிக்கப்படுகிறது. (44)

### பாடசாலை கட்டட அமைப்புக்கு

## 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டும் பணிகள் இன்னும் பூர்த்தியடைவில்லை

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு, நிகொட் நிறுவனம் சுமார் 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தபோதும், பாடசாலைக் கட்டடங்கள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை எனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கவலை தெரிவித்தார் .

இந்தத்திட்டத்தின்கீழ், இந்த மாவட்டத்தில் 12 பாடசாலைகளில் இரண்டு மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டுவருகின்றன. இவற்றுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் கடந்த வருட முற்பகுதியில் நடபெற்றன. ஆனால், புனரமைப்புப் பணிகள் மந்தகதியிலேயே நடைபெறுவதாக அவர் கவலை வெளியிட்டார்.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்த மாவட்டத்தில் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம், பிரமந்தனாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக்கல்லூரி, உருத்திரபுரம் புனித பாத்திமா றோ.க.த.க பாடசாலை, புன்னை நீராவியடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தர்மபுரம் மகாவித்தியாலயம், கண்டாவளை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (122)



**சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் மலேரியா ஒழிப்புத்திட்ட நடவடிக்கையின் முகமாக கடந்து 13 ஆம் திகதி கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் பொதுமக்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான நுளம்புவலைகள் வழங்கப்பட் டன. இந்த நிகழ்வில் முன்னாள் ஆளுநர் உபாலிசமரசிங்க, சுன்னாகம் லயன்ஸ் கழகத்தலைவர் திருநாவுக்கரசு, செயலாளர் மகாதேவா ஆகியோர் காணப்படுவதையும், க.செல்லையா என்பவர் நுளம்பு வலையினைப் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். (44)**

## நடமாடும் வைத்திய சேவையை இவ்வருடமும் தொடர்ந்து நடத்துக!

### செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை

(ஆழியவளை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினால் - மருதங்கேணியில் நடத்தப்பட்டு வந்த நடமாடும் வைத்திய சேவையை இந்த வருடமும் தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு, இலங்கை செஞ்சிலுவைச்சங்க மருதங்கேணி பிரிவு யாழ்.கிளையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நடமாடும் சேவை கடந்த, ஆறு மாதங்களாக - வடமராட்சி கிழக்கின் மாமுனை, கட்டைக்காடு, உடுத்துறை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வந்து, தற்போது தனது சேவையை முடிவுசெய்துள்ளது.

மருதங்கேணி வைத்தியசாலை இயங்காததன் காரணமாக - இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்கள் வைத்திய வசதியின்றி அல்லல்படுகின்றனர்.

எனவே, மருதங்கேணி வைத்தியசாலை மீள ஆரம்பிக்கப்படும்வரை இந்த நடமாடும் வைத்திய சேவையை தொடர்ந்து நடத்துமாறு, பிரிவுத்தலைவர் ச.திரவியராசா யாழ்.கிளையின் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (122)

### நுளம்பு வலைகளுக்கு மருந்து தெளித்தல்

வட்டுக்கோட்டை பொதுசுகாதார பரிசோதகர் பிரிவில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை வட்டுக்கோட்டை மாவடி மத்திய மருந்தகத்தில் நுளம்புவலைகளுக்கு மருந்து தெளித்தல் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் தங்களிடமுள்ள நுளம்புவலைகளை கொண்டுவந்து, மருந்து தெளித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (44)

### மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்தும் மணிவாசகர் விழாவின இரண்டாம் நாள் நிகழ்வுகள், இன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் தலைமையில் நடைபெறவுள்ளது. மாலை 6 மணிக்கு திருவாசகத்திருமுறை ஓதல் நடைபெற்று, தொடர்ந்து ஆறு. திருமுகனும், சிவ.மகாலிங்கமும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

## கலாசாரம்



# தீவட்டி

சிறுகதை

மணியத்தார் வீட்டில் என்றுமில்லாதவாறு கலகலப்பு.

உறவினர்கள், ஊர்ப்பழசுகள் என்று சிறுகூட்டமே கூடியிருந்தது. மணித்தாரின் ஒரே வாரிசு திவாகரனுக்குத் திருமணம் பேசியாகிவிட்டது. இரண்டு, மூன்று வருடங்களாக மகனுக்குப் பெண் தேடித்தேடி மணியத்தார் அலுத்திருந்த போதுதான், "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது" போல இந்தச் சம்பந்தம் வந்து சேர்ந்தது.

"பொம்பிளை வடிவாம். செக்கச் செவேலெண்டு நல்ல கலராம். நல்ல இனசனமாம், கொழுத்த சீதனமும் தருவினமாம்" என்றவுடன் மணியத்தார் சம்மதம் சொல்லிவிட்டார்.

அதுவும் பொம்பிளை வெளிநாடு என்றதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. காலப்போக்கில் தானும் மனிசியும்கூட வெளிநாடு போக யோகமிருப்பதாக நினைத்துக்கொண்டபோது, வானத்தில் பறப்பது போன்ற உணர்வு.

"எப்பயண்ணா, எல்லோருக்கும் சாப்பாடு போடப்போகிறியள்",

யாரோ கேட்டார்கள்.

அவரோ ஏதோ ஒரு சிந்தனையில் ஒன்றிப்போயிருந்தார். அவர் மனத்திற்குள் ஏதோ ஒன்று குடைந்து கொண்டிருந்தது.

"பொம்பிளையின்ற குடும்பம் எப்படி?"

"புறோக்கர் சொன்னானே, தாவடியாம்?"

"தாவடியில, எனக்குத் தெரிந்தளவுக்கு, இரத்[illegible]ம் குடும்பம் எது?"

எதுவும் நினைவுக்கு வரவில்லை..

யோசித்தார்.

"ஆ! 'தீவட்டியாக' இருக்குமோ?"

நினைத்த மாத்திரத்திலேயே அவருக்கு வியர்ந்துவிட்டது. அவர் உடலில் ஒரு வெடவெடப்பு!

"தீவட்டி இரத்தினத்தின் மகளாக இருக்குமோ?

உடனே பதில் அறிந்தாக வேணும்"

அவர் மனம் நினைத்துக்கொண்டது.

மணியத்தாரின் குடும்பம் பரம்பரை பரம்பரையாகத் தோட் டம், துரவு என்று வாழுகின்ற குடும்பம். மணியத்தாரின தகப்பன் முந்தி இங்கிலீஷ்காரன் காலத்திலேயே கவன்மன்ற் உத்தியோகம் பார்த்தவர். ஊரிலே நல்லமரியாதை அவருக்கு.

மணித்தாருக்கு அப்போது எட்டு வயதிருக்கும். சின்னப் பொடியன். ஊரிற்கு நடுவே இருந்த சின்னப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தார். அவர்களுடைய வீட்டுக்குச் சில வீடுகள் தள்ளி ஒரு சிறிய கல்வீடு இருந்தது. ஒருநாள் அங்குதான் இரத்தினத்தின் தாயும், தகப்பனும் "வாடகைக்கு" என்று வந்து குடியேறினார்கள். இரத்தினத்தானுக்கும் அப்போது எட்டுவயதுதான். புது ஊருக்கு வந்த அடுத்தநாளே அவனும் அதேபள்ளியில் சேர்ந்துகொண்டான். இருவரும் ஒரே வகுப்பு.

இரத்தினத்தின் அப்பா கூலிவேலை செய்பவர். வீட்டில் கஷ்டமோ, என்னமோ! எப்பவும் கசங்கிய சேட்டுத்தான் போடுவான் அவன் மூக்கால் எப்பவும் சளி எட்டிப் பார்த்தபடி இருக்கும். அவனை மணியத்தாருக்குப் பார்க்கவே பிடிப்பதில்லை. விளையாடப்போனால்கூட சேர்த்து விளையாட வரமாட்டான். படிப்பிலும், படுமக்காகவே இருந்தான்.

அவன் அயல்வீடாக இருப்பதே மணித்தாருக்குப் பெரிய கௌரவக்குறைவாக இருந்தது.

ஒருதரம் இரத்தினத்தானை ஒரு வகுப்புக் கீழிறக்கிவிட்டார்கள். இரத்தினத்தான் வகுப்பிலேயே குழறியழத் தொடங்கிவிட்டான். அன்று இரவே மணியத்தாரின் தகப்பனின் காலை இரத்தினத்தானின் தகப்பன் கட்டிப்பிடித்துக்கொண்டான்.

"ஐயா, நான் என்ன செய்வன், நீங்கள்தான் உதவ வேணும்" எண்டு.

மணியத்தாரின் தகப்பனுக்குப் பிரின்சிப்பல் நல்ல பழக்கம். அவர் போய்க் கதைச்சபிறகுதான் இரத்தினத்தான் தொடர்ந்து படிக்க அனுமதி கிடைத்தது.

அதுக்கு அடுத்தடுத்த வருடங்களில் எல்லாம் இரத்தினத்தானுக்குப் படிப்பு ஓடவில்லை. அப்பவெல்லாம் ஏதோ பத்திமானாகத் திருநீறும் பூசி, ஒரு ஊத்தை வேட்டியோடு கோயில், கோயில் எண்டு திரிவான். ஊர் நடுவில் இருந்த பிள்ளையார் கோயிலுக்கு அடிக்கடி போவான். எந்தத் திருவிழா நடந்தாலும் அங்கு தீவட்டி பிடிச்சுக்கொண்டு நிற்பான். அதனால் "தீவட்டி இரத்தினம்" என்று ஒரு பெயரும் நிலைத்துவிட்டது.

மணியத்தார் தொடர்ந்தும் ஊக்கமாய்ப் படித்தார். பிறகு அந்தப் பாடசாலையிலேயே ஆசிரியவேலையும் கிடைத்தது.

கலியாண வயதுகள் வந்தபோது, மணியத்தாருக்கு ஊர்ப் பெரியவர்கள் பேசி கலியாணம் நடத்திவைத்தனர். அது நடந்த இரண்டாம் நாளே இரத்தினம் யாரோ ஊர்பேர் தெரியாதவளை தூக்கிக் கொண்டோடி, கலியாணமும் செய்துபோட்டான்.

"அட, கோயில் குளம் என்று திரிந்தவனா, இப்படி?" என்று ஊரே ஆச்சரியப்பட்டது. பெட்டை வேறசாதிக்காரி என்றும் பேசிக்கொண்டார்கள்.

இரத்தினத்தானின் இந்தக் கூத்து ஏதோ ஒரு அபசகுணமாகவே மணியத்தார் வீட்டில் கணக்கிடப்பட்டது. மணியத்தாரின் தகப்பன் கொஞ்சம் கொதிகாரன். அவர் அன்று இரவே இரத்தினத்தான் வீட்டுக்குப் போய், தொண்டை கிழிய ஏசிப் போட்டு வந்திட்டார். அன்றைக்கு அந்த அயலே அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. ஆண்டுகள் ஓடின.

மணியத்தாரின் தகப்பன் பிரசர்காரன். ஒருநாள் ஹார்ட்-அட்டாக் வந்து செத்துப் போனார். இரத்தினத்தின் தகப்பன் ஊரறிஞ்ச பெரும்குடிகாரன். ஈரல்கருகி அவனும் செத்துப் போனான். நாளடைவில் குடும்பப் பொறுப்புக்கள் மணியத்தினதும், இரத்தினத்தினதும் தலைகளில் விழுந்தன.



இரத்தினத்தின் தகப்பன், குடும்பத்திற்கு பணமோ, சொத்தோ சேர்த்துவைக்கவில்லை. வாடகைக் காசுகட்டவே ஊருக்குள் கடன்படவேண்டியிருந்தது.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. "பெண்சாதி வழி ஆக்கள் கூப்பிடுகினம்" என்று சொல்லி இரத்தினத்தான் மனிசியுடனும், ஒரு பெண்குழந்தையுடனும் வெளிநாடு போனான். போனவன், போனவன்தான். திரும்பவேயில்லை.

மணியத்தாரோ, ஊரோடு இருந்தார். அவருடைய உத்தியோகம், பிள்ளையின் படிப்புகள் என்று அவருடைய பொழுதுகள் கழிந்தன.

நாட்டில் சண்டைகள், இடம்பெயர்வுகள் நடந்த போதெல்லாம் அதில் மணியத்தார் குடும்பமும் சிக்குண்டு சீர்கெட்டது. அப்போதெல்லாம் அவருக்கு வெளிநாட்டு ஆசை தலைதூக்கிப் பார்க்கும்.

வெளிநாட்டுக்குப் போவதற்கு அவர் பட்டபாடுகள் எத்தனையோ, எத்தனையோ?

எதுவும் சரிவராத பட்சத்தில் ஊரோடு ஒன்றிவாழ வேண்டியதாயிற்று. என்றாலும், வெளிநாட்டு மோகம் விட்டபாடில்லை.

மகன் திவாகரன் படித்து பட்டதாரியாகி, வேலையும் கிடைத்துவிட்டது. பத்தாயிரம் ரூபா மாதச்சம்பளம். அவனுக்கு ஒரு நல்ல இடமாகப்பார்த்து கலியாணம் செய்து வைத்தால் தான் மணியத்தாருக்கு நிம்மதி.

தனக்குத் தெரிந்த நாலைந்து கலியாணத்தரகர்களிடம் 'சாட்'டையும் கொடுத்துவைத்தார்.

பொம்பிளை,

"குணம் நல்லதாக,

"குடி நல்லதாக இருந்தால்மட்டும் போதாது, கொழுத்த சீதனமும் தரவேண்டும்!"

இது அவருடைய கண்டிசன்.

இந்தக் காலத்தில் சும்மா கடையில நிக்கிற பொடியளுக்கே பத்துப் பதினைந்து லட்சமெண்டு போகுது, என்ர மகனுக்கு முப்பதாவது கேட்டால் என்ன? என்பது அவருடைய வியாக்கியானம்!

சம்பந்தங்கள் சில வந்துபோயின.

ஆனாலும் ஆனைக் கோட்டைப் புரோக் கர் கொண்டு வந்த சம்பந்தம் அவருக்குப் பிடித்துப் போயிற்று.

"வடிவான பிள்ளை...

நல்ல இனசனம்,

முப்பதுக்கும் மேல சீதனம்...

இதைவிட

பொம்பிளை வெளிநாடு...."

இது போதுமே மணியத்தாருக்கு!

அவருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

"முந்தி யாழ்ப்பாணம் தானாம், தாவடியில் தான் இருந்தவையாம்," என்று புறோக்கர் சொல்லிவைத்தார்.

யாழ்ப்பாணம்தானே, பிறகு விசாரிக்கலாம் என்று, மணியத்தாரும் "சரி" சொல்லிவிட்டார்.

"சாட்டுகள்" பார்க்கப்பட்டன. நல்ல பொருத்தம். பிறகென்ன, கலியாணம் செய்யவேண்டியதுதானே பாக்கி!

ஆனால்,

இப்போது ஒரு சந்தேகம் முள்ளாய் முளைத்து கலக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலும் அது தீவட்டி இரத்தினத்தின் மகளாகத்தானிருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

உறுதிசெய்யமுடியவில்லை.

சரி, அப்படித்தானெண்டாலும்...

"இந்தக் காலத்தில சாதி, சமயம் எண்டு யார் பார்க்கிறது. ஏதோ குடும்பம் சந்தோஷமாக இருக்கிறதுதானே முக்கியம். அதுக்கு, ஏலுமானமட்டும் சீதனக்காசில வறுகிப்போடோணும்," அவர் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

பழைய இருப்புக் கேற்றின் "கிறீச்" சத்தம், அவர் கவனத்தை திசை திருப்புகிறது.

யாரோ ஒரு வருகிறார்.

மணியத்தார் பார்க்கிறார்.

அந்த ஆனைக்கோட்டைப் புறோக்கர்.

"ஆ, வாரும், வாரும்" என்கின்ற சம்பிரதாய



உபசரிப்புக்குப் பிறகு, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மெதுவாய் கேட்டார்.

"மெய்யே, பொம்பிளை வீட்டாரைப்பற்றி, ஏதாச்சும் தெரிஞ்சுதோ...'

"ஓமோம், விசாரிச்சினான். அது உங்களோட படிச்ச, தீவட்டி இரத்தினத்தின் மகளாம்!

மணியத்தாருக்கு நெஞ்சுக்குள் ஒரு மெல்லிய நடுக்கம்! வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

ஏமாற்றுப்பட்டதாக ஒரு உணர்வு தோன்றி மறைந்தது. அடுத்த கணமே,

"முப்பது லட்சம் சீதனம்,

வெளிநாட்டுப் பயணம்..."

தான் வென்றுவிட்டதாக நினைப்பு!

அவர் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டார்.

"அண்ண" -

ஒரு பவ்வியமான புறோக்கரின் குரல் அவர் கவனத்தைக் கலைக்கிறது.

"அண்ண, ஒரு விஷயம் சொல்லவேணும்...

அவ, பொம்பிள வீட்டோட கதைச்சனான்.

அவவேற ஒரு மாப்பிளை பாத்திருக்கினமாம்.

கொழும்பில டொக்ரராயிருக்கிறானாம்.

சரி, கவலையை விடுங்கோ...

வேற நல்ல இடமாய் வந்தா சொல்லுறன்"..

சொல்லிவிட்டு புறப்பட்ட போது, மணியத்தார் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

☆ ரீ.சோ.பதந்தன்

# கதைக்காதே..



செல்வம் - துன்னாலை

அதிகாலை சூரியன் வருவதற்குள் எழுந்து, முகம், கால் கழுவிவிட்டு, அம்மாவிடம் விடைபெற்று - யாழ். பேருந்து தரிப்பிடத்திற்குச் சென்றேன். துன்னாலைக்குச் செல்வதற்காகப் புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்ற பேருந்தில் ஏறி, இருக்கையில் அமர்ந்துகொண்டேன். அருகில் வயதான ஒருவர் அமர்ந்திருந்தார். வண்டி புறப்பட இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றது. பக்கத்தில் இருந்த பெரியவரும் கதைக்காமல் இருந்தார். நான் அந்தப் பெரியவரைப் பார்த்து - ஐயா! எங்கே போகின்றீர்கள் என்று கேட்க, அவரும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்தார்.

என்னடா இது நான் கேட்டது அவர் காதில் விழவில்லையோ. தெரியாமல் சில மணி நேரம் கழித்து அவரிடம் அதே கேள்வியை மறுபடியும் கேட்டேன். அந்தப் பெரியவர் உடனே 'கதைக்காமல் இருக்கிறியா' என்றார் கோபமாக.

ஏன்னடா இவர் அருகில் வந்து உட்கார்ந்தேன் என்றிருந்தது. முன் இருக்கையில் அமர்ந்தவரிடம், ஏதாவது கதைப்போம் என்று அவரிடமும் இதே கேள்வியைக் கேட்டேன். அவரும் கோபத்தில் வாய்க்கு வந்தபடி 'நான் எங்கேயோ போகின்றேன்' என்றார். என்னடா இது இவரும் அவரைப்போல் இருக்கின்றார் என என்மனம் தனக்குள்ளே சொல்லிக் கொண்டது. சரியென்று என்மனத்தினை திருப்திசெய்துகொண்டு சிலமணிநேரம் பேசாமல் இருந்தேன்.

ஆனால், முடியவில்லை. யாருடனும் பேசவேண்டும் போலிருந்தது. பின்னே திரும்பிப் பார்த்தேன். ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரிடமும் கதைக்கவேண்டும் போலிருந்தது. பிறகென்ன அவரிடமும் அதேகேள்வியைக் கேட்க அவர் பதில் சொல்லாமல் என்னைப் பார்த்து 'நீ எங்கே போகின்றாய்' என்று கேட்டார். 'நான் துன்னாலைக்குப் போகின்றேன்' என்றதும் - 'நான் பின்னாலை போகின்றேன்' என்றார் கோபமாக. என்ன நடந்தது எல்லாரும் ஒரேமாதிரி இருக்கின்றார்கள்.

என்மனது ஏதோ ஒன்றைத் தேடப்போய் கிடைக்காமல் வெறுமையாக இருப்பதுபோல் இருந்தது. முன்னே பார்த்தேன். எனக்கு முன்னே நாலைந்து இருக்கைகள் தாண்டி ஒரு இருக்கை வெறுமையாகக் காணப்பட்டது. எழுந்து சென்று அவ்விடத்தில் அமர்ந்தேன். பக்கத்தில் ஒரு இளைஞர். மந்திகை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது வண்டி.

அந்த இளைஞர் எங்கே போகின்றீர்கள் என்று கேட்க, நானும் துன்னாலை என்றதும், அவரும் மந்திகை என்றார். மந்திகை என்றதும் இவரும் அவர்களைப்போல் இருக்குமா என ஒரு அச்சம் ஏற்பட்டது. இளைஞர் கேட்டார் - பின்னே இருந்த நீங்கள் ஏன் முன்னே வந்து இருக்கின்றீர்கள் எனக் கேட்க, பக்கத்தில் இருந்தவரும் முன்னே இருந்தவரும் பின்னே இருந்தவரும் கோபமாக இருக்கின்றார்கள் அதுதான். ஓ... அப்படியா அவர்கள் மூன்றுபேரும் உறவினர்கள். சிறுபிரச்சினையால் ஒருவரோடு ஒருவர் மூன்று வருடங்களாகக் கதைக்காமல் இருக்கின்றார்கள் என்றார். அதுதான் கதைக்காதே என்று சொன்னார்களோ.

# நமது இலக்கியங்கள், இலக்கியவாதிகள்...

## ஒரு கருத்தியல் நோக்கு

'மாற்றான் தோட்டத்து மல்லிகை மணம் வீசும்' என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள் - முற்றத்து மல்லிகையின் வாசம் உணராதவர்கள். இக்கருத்துக்களின் வழிநின்றவர்களை உருவாக்குவதும், அதனை விபரிப்பதுமே உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடாக அமைந்திருக்கின்ற யாழ்.குடாநாட்டின் கல்வித்தரம், இலக்கியநோக்கு பற்றி எழுதாமல் இருக்கமுடியவில்லை.

எங்கள் நாட்டின் இலக்கியத் தரத்தையும், ஈழத்து இலக்கியத்தின் சிறப்புக்களையும் வளர்க்கின்ற பணிகள் ஒரு புறத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில், பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றை எடுத்தச் சொல்லி புரியவைப்பதற்கு ஒருவரும் முன்வருவதில்லை.

இவற்றை எடுத்துச்சொல்வதால், தமது இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சநிலை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இப்படியான ஒரு நிலைப்பாட்டில் இருப்பவர்கள் தாமுண்டு, தம்வேலையுண்டு என்று இருக்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து இலக்கியம் தொடர்பான நபர் வருகின்றபோது, எமது இலக்கியத் தரம் பற்றி அவர் குறைத்துக் கூறுகின்றபோது ஒத்தூதிக்கொண்டு இருத்தல் கூடாது. நம்மிடையே உள்ள சிறந்த எழுத்தாளர்களை இனங்காட்டி, அவர்களின் படைப்புக்களின் தரம்பற்றி எடுத்துக்கூறி, நாங்களும் உங்களுடைய தரத்திற்கு வந்துகொண்டிருக்கின்றோம் என்பதை உணர்த்துதல் வேண்டும்.

இவ்வாறு கூறுவதற்கு, முற்றத்து மல்லிகைகளை நுகராமை காரணமாக இருந்தால் அதுபற்றிய விவாதத்திற்குச் செல்லாமல் இருக்கவேண்டியது அவசியமானது.

விவாதங்களில் கலந்துகொண்டு, ஈழத்து இலக்கியத்தரம் குன்றிவிட்டது என்று கூறுபவர்களோடு ஒத்தூதுதல் கூடாது.

ஈழத்து இலக்கியத்தை வளர்ப்பதற்குத் தரமான இலக்கியப் படைப்புக்கள் வெளிவருவதற்கு, எல்லோரும் இணைந்து செயற்படவேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் மூலமாக எங்களுடைய வரலாற்றை நாமே எழுதிக்கொள்வோம் என்று பெருங்குரல் எழுந்த நேரத்தில், அந்த சங்கின் குரலைக் கேட்காமல் செவிடாகிப் போனவர்கள், தற்போது ஊமை வாய்திறந்து கதைத்ததைப்போல் உளறுகின்றார்கள்.

இந்த நேரத்தில், ஒன்றைக் குறிப்பிடவேண்டியது அவசியம். வெளிநாட்டவர்களை அழைத்துவந்து ஈழத்தில் எங்களது இலக்கியம் தரங்குன்றிப் போகின்றது என்று தீவிரமான 'இலக்கியவாதிகள்' எனக் கூறப்படுபவர்கள் சிலர் பேசுகின்ற அதேநேரத்தில், வெளிநாடுகளில் ஈழத்து எழுத்தாளர்கள் போய், ஈழத்து எழுத்துக்களால்தான் தமிழ் வாழப்போகின்றது என்று கூறுவதையும் கவனத்தில் கொள்ளல்வேண்டும்.



ஈழத்தின் இலக்கியத்தரம் குறைந்துவிட்டது என்று சொல்வதன்மூலம் எதைச் சாதிக்க நினைக்கின்றார்கள் என்றால், ஒரு குறித்த வட்டத்திற்குள் நின்று சுழல நினைக்கின்றார்கள் என்றே கூறமுடியும்.

ஒரு இலக்கியப் படைப்பு எழுந்த காலம், எழுந்த இடம், எழுந்த நோக்கம் இவற்றை முதன்மையாகக் கொண்டு பார்க்கின்றபோது, ஈழத்து எழுத்துக்கள் உணர்ச்சியின் எல்லைக்கும், இலக்கியக் கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு, தனக்கென ஒரு இலக்கியக் கோட்பாட்டை உருவாக்கி, அந்த வழியில் ஏனைய இலக்கிய கர்த்தாக்களையும், இலக்கிய கருத்தாளர்களையும் தன் பின்னால் அழைத்துவரும் காலம், வெகுதூரத்தில் இல்லை என்பதைத்தான் தற்போது கூறிக்கொள்ளமுடியும்.

இந்த நிலைமை எவ்வாறு என்றால், இலக்கிய வாதிகள் என்று கூறப்பட்டவர்கள் - ஆரம்பத்தில் பாரதியார் எழுதிய வசன கவிதைகளை, கவிதைகளாக ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள். காலப்போக்கில் அவற்றை 'புதுக்கவிதை' என்ற வரையறைக்குள் அடக்கி, இலக்கிய வடிவமாக ஏற்றுக்கொண்டமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பூ.நகுலன்

# மண் பற்றியதும் நிறம் பற்றியதுமான ஓர் ஆய்வுக்குறிப்பு



மண்,
இது மிகமிக தொன்மையானது.
அநாதிகாலமுன்
கல்லிலிருந்து தோன்றியதாம்.

உலகு,
பலகோடி ஆண்டுகளுக்கு முன்னே
உடுக்களின் மோதல்,
அதன் சிதறல்கள், சிதைவுகள்
தூசியாகி, பின் துகளாகி
துகள்திரண்டு இறுகியும்
இறுகாதும் தோன்றியது.

உலகு பெரும்பாகமும்
மண்ணாலானதுதான்.
கடல் பெரும்பங்கெனினும்
கடலையும் அடியாளத்து மண்
தாங்குவதை மறுக்கமுடியாது.

மொத்தத்தில் மண்ணாலானதிவ்வுலகு
சந்திரத்தரை,
செவ்வாய்த்தரை எல்லாமுங்கூட
மண்தான்.

வேர்புகுந்தோடி
மரம் நிமிரவும்,
காலூன்றி நின்று நிமிரவும்,
ஆதாரம் மண்.

பிறப்பு முதல்
இறந்து உக்கி,
உடல் மண்ணாகும்வரை
உயிர்களைத் தாங்குவதில்
தாய் புறக்கணிப்பினும்
மண் புறக்கணிப்பதாயில்லை.

தேசியம் தொடர்பில்
இனக்குழும வாழ்வாதாரமும்
பொருளாதாரமும்
தங்கியிருப்பதும்
மண்.

இன்னும்,
தொன்மை பற்றியும்
பூர்வீகம் பற்றியுமான எச்சங்கள்
கொண்ட பண்பட்ட வாழ்வின்
படிமங்களைப் பொத்திவைத்திருப்பது
மண்.

எனவே,
போர்களைத் தீர்மானிப்பதிலும்,
மண்ணின் பங்கு
பறித்தல்; பாதுகாத்தல் என
முகங்காட்டுவதுமாகும்

நிறங்கள் தொடர்பில்
தனிமூலமாய் முதலாய்
மூன்று நிறங்கள்.
சிவப்பு, மஞ்சள், நீலம்.

கறுப்பு நிறமேயல்ல,
ஒளியற்றறுத்த வெறுமை.

வெள்ளை எல்லாம் கொண்டு
கலந்த ஒளிர் கலவை.

மூலம் மூன்றும் தனித்தனி
சமதையில் இணைவது
கபிலம்.
(மண் எனப்படுவது இது, அல்லது
அழைக்கப்படலாம்)

முழுவதினதும்
மூலாதாரம் மண்.
முற்றையும் தாங்குவதும் மண்

மண் இடத்திற்கிடம்
வேறுபடுவது.
அளவில், நிறத்தில் என.

கடலோரம் வெண்மை,
குட்டையில் கருமை,
தோட்ட (இருவாட்டி)த்தில் செம்மை,
இப்படியாக, இவ்வாறாக
நிறம் மாறுவது.

இப்படியே பார்ப்பின்
இதன் பெயரில்
நிறத்திற்கென்ன ஒட்டுறவு?

மூலத்தில் குழறுபடியற்று
பிறந்த வர்ணம் மண்ணிறம்.
அதுவே மண்ணிற்கு நிறமா?
மண்ணின் நிறமே அதுவா??
எப்படியெனினும்,
இருந்து ஆறியமரச் சிந்திக்கவும்
பயனுள்ளபடி விவாதிக்கவும்
வேண்டும்.

வெண்மை = மண்ணிறம்
செம்மை = மண்ணிறம்
கருமை = மண்ணிறம்
எனும் சூத்திரப்படி
(சிவப்பு + நீலம் + மஞ்சள் + மண்ணிறம்)
ஆகவே,
வெண்மை = கருமை = செம்மை = மூலநிறம்
மூன்றும்,
என எப்படி நிறுவமுடியும்?

ஆய்வுக்குரியதாகிறது.
நேரமொதுக்கவேண்டும்.

நேரமற்ற நிர்ப்பந்தப் பொழுதுகளில்
எதையாவது, எவனாவது
முயலட்டும் (வேலைவெட்டியற்று)
பின்; அதையதைச் சொல்லட்டும்
அல்லது எழுதட்டும்.

பரீட்சைக்கு அவசியமாயின்
பதவியுயர்வுகளிற்கு உதவுமாயின்
அப்படியே; அப்படியே
நெட்டுருப் போட்டுக்கொள்ள
குறிப்புகளை இனி
யாரிடமாவது யாசிக்கவேண்டும்.

மண்பற்றியோ,
நிறம்பற்றியோ யோசிக்க
இப்போதைக்கு அவசியமில்லை,
என நினைப்பது பொருத்தம் / பொருத்தமில்லை

முடிவைப்பற்றியாவது அறிவித்தல்
வேண்டும்.

கை. சரவணன்

சர்வதேச அரசியலில்...

கே.ரீ.கணேசலிங்கம்





**சார்க் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதென்பதைச் சாத்தியப்படுத்துவதில் வாஜ்பாய் - தென்னாசிய நாடுகளை ஒன்றிணைப்பதில் கணிசமான விருப்புக்களையுடையவராக உள்ளார். அத்தகைய ஒன்றிணைப்பு என்பது தென்னாசியாவின் சமாதானமும், சகவாழ்வும் ஆகும். ஏனெனில், வாஜ்பாயைப் பொறுத்தவரை அல்லது இந்தியாவின் ஆளும் தலைமையைப் பொறுத்தவரை 2020 ஆம் ஆண்டில் இந்தியாவை வல்லரசாக மாற்றுவதே நோக்கமாகும்.**

# இஸ்லாமாபாத் சார்க் உச்சிமாநாடும் இந்திய - பாகிஸ்தான் அரசியல் நலன்களும்

12 ஆவது சார்க் உச்சிமாநாடு இஸ்லாமாபாத்தில் ஆரம்பித்துள்ளது. பாகிஸ்தானின் தலைநகரம் மட்டுமல்ல, பாகிஸ்தானே கோலாகலமாக மாறியுள்ளது. பாகிஸ்தானின் ஜனாதிபதி முஷராப் ஆட்சிக்கு வந்த பின்னர் அதிகமாக மகிழ்ச்சியடைந்த நாள் சார்க் மாநாட்டுக்கான தினமே என்பதை முஷராப்போ, பாகிஸ்தானோ மறக்கமுடியாது. இது முஷராப்பின் இராஜதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே உள்ளது. அத்தகைய வெற்றிக்குப் பின்னால் உள்ள இரகசியங்களையும், சார்க் மாநாட்டுக்குப் பின்னாலுள்ள இந்திய அரசியலையும் பரிசீலிப்போம்.

1985 ஆம் ஆண்டு தென்னாசிய பிராந்திய கூட்டமைப்பான "சார்க்" என்ற அமைப்பு பொருளாதார, சமூக, கலாசார அடிப்படைகளை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. தென்னாசியாவிலுள்ள ஏழு பிரதான நாடுகளும் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட ஒத்துழைப்பு அமையமானது, அரசியல்ரீதியில் இரண்டு நாடுகளது பிரச்சினைகளைப் பற்றிய ஒன்றாக உருவாக்கப்பட்டது. ஆனாலும், பலமான நாடுகளும், கூட்டத் தொடர்களும் அரசியல் காரணங்களுக்காகவே ஒத்திவைக்கப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. இந்தியா என்ற பெரிய வலுவான, அரசை எதிர்கொள்ளவும் இறையாண்மையின் சமத்துவத்தை வெளிப்படுத்தவும், சிறிய நாடுகளால் உருவாக்கப்பட்ட அமைப்பாகக்கூட சார்க் அமைப்பு பார்க்கப்படுகிறது.

இரண்டாவது தசாப்தத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் சார்க் அமைப்பு - ஆசியான், ஐரோப்பியயூனியன், நப்ரா போன்ற எந்த அமைப்புடன் ஒப்பிடக்கூடியளவுக்கு எதுவித சாதனைகளையும் நிகழ்த்தியிராத அமைப்பாக உள்ளது. அதிக முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் சார்க் அமைப்பு - வறுமை, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் உரிமைகள் மதிக்கப்படாமை, பொருளாதாரரீதியிலான நெருக்கடிகள் என்பனவற்றுடன் இனமுரண்பாடுகள், மதமுரண்பாடுகள் என்பனவற்றால் அதிக அபாயத்தை எதிர்நோக்கியுள்ள கூட்டமைப்பாகவுள்ளது.

இனிவிடயத்துக்கு வருவோம். இஸ்லாமாபாத் சார்க் மாநாடு என்பது முஷராப்பின் அரசியல் எதிர்காலத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். முஷராப்பின் அரசியல் பிரகாசமாகவே அமையவுள்ளது என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது. முஷராப்பை இராணுவத் தளபதியாகப் பார்க்கும் நிலைமை உலகத்தாலும், இந்தியாவாலும் மறக்கப்பட வேண்டிய நிலைக்குத் தற்போதைய போக்கு மாற்றியுள்ளது. குறிப்பாக முஷராப் இரண்டு தடவை, தான் ஒரு ஜனநாயகவாதியாக காட்ட முயன்றுள்ளார்.

ஒரு தடவை ஆக்ரா மாநாட்டுக்காக (**July 14,16 - 2001**) இந்தியா வந்தபோது தன்னை பாகிஸ்தானிய அரசியலமைப்புக்கு உட்பட்ட ஜனாதிபதி போன்று பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நிகழ்வாகும். அதில் இந்தியாவுடன் அதிக உடன்பாடு எதனையும் முஷராப் எட்டாதுவிட்டாலும், தனது அரசியல் வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொண்டார். அதற்கு அப்போது அமெரிக்க ஆட்சியாளர்களும் ஒத்துழைப்பு அளித்தனர். இன்றும்கூட அமெரிக்கர்களின் அரவணைப்பு கிடைத்துவருகின்றதை அண்மைய சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இரண்டாவது நிகழ்வு முடிந்தவாரத்தின் நடுப்பகுதியில் முஷராப்பின் ஆட்சிக்காலம் மேலும் ஐந்துவருடங்கள் நீடிக்கும் நடவடிக்கை பூர்த்தியானதாகும். முஷராப்- பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் அரசியல் கட்சிகளால் ஆட்சி நீடிப்புக்கு ஆதரவு கிடைத்திருப்பதுடன், இராணுவத் தளபதி பதவியிலிருந்தும் விலகுவதான உத்தரவாதத்தை முஷராப் வழங்கியிருந்தார். இதில் பல கட்சிகள் ஆதரவு தெரிவிக்காது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலிருந்தும் வெளியேறிய போதும், ஆளும் கட்சியால் முஷராப் தெரிவாகியுள்ளார். பிரதமரை, இராணுவ நடவடிக்கைகளை கையாளும் அதிகாரம் உட்பட, அதிக அதிகாரமுடைய தலைவராக முஷராப் விளங்கக்கூடியதான நடவடிக்கை சட்டரீதியானதாக மாறியுள்ளது. எனவே, மீண்டும் ஒரு தடவை முஷராப் ஜனநாயகவாதியாக உருவெடுத்துள்ளார். அவரது உரையாடலும், அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையும் சார்க் மாநாட்டுக்கான ஏற்பாடாகவே முன்வைக்கப்பட்டபோதும், எதிர்பாராத விதத்தில் தனது ஆட்சியை நீடிப்பது பற்றிய விடயத்தை வெளிப்படுத்தி, அரசியல் கட்சிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்ததாகத் தெரியவருகின்றது. எதுவாயினும் முஷராப் இந்தியாவிற்கு நீண்டகால எதிரியாக இருப்பதற்குத் தயாராகிவிட்டார் என்பதைவிட, இந்தியாவை எதிர்க்க அமெரிக்காவுக்கு ஒரு துரும்புச் சீட்டாக முஷராப் கிடைத்துள்ளார் என்பதே மறைமுகமான செய்தியாகும்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் - முஷராப்புடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சார்க் மாநாட்டுக்கான தயார்ப்படுத்தலை பாராட்டியதுடன், இந்தியாவுடனான சுமுக உறவுக்குப் பாகிஸ்தான் தயாராகவேண்டுமெனக்கோரியிருந்தமையும் அமெரிக்காவின் கவனத்தையும், முஷராப்புடனான உறவையும் கோடிட்டுக் காட்டப்போதுமானது. மிக அண்மைக் காலத்தில் இரண்டு வாரத்துக்குள் இருதடவை தற்கொலைத் தாக்குதலிலிருந்து முஷராப் தப்பியதுடன், அமெரிக்க இராஜதந்திரிகளும், தலைவர்களும் நடந்துகொண்ட விதத்தையும் மேலதிக ஆதாரமாகக் கொள்ளலாம்.

எனவே, முஷராப்பின் தந்திரமான நகர்வு சார்க் மாநாட்டுக்கான சாத்தியப்பாட்டை இலகுபடுத்தியுள்ளது. குறிப்பாக இந்தியாவுடன் முஷராப் கொண்டிருந்த அணுகுமுறை தனித்துவமானதாக அமைந்திருந்தது. இதனை அவதானிக்கும்போது, சார்க் அமைப்பு இந்தியா - பாகிஸ்தான் என்ற இரு அரசுகளையும் மையம் கொண்டதென்றே கூறத்தோன்றும். ஏனைய அரசுகள் அரசுகளாக இல்லையென்பதும், அவற்றின் பலவீனமான அரசியல் இராஜதந்திரமும், இந்தியாவின் தனித்துவ ஆதிக்கமும் அத்தகைய சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

அதாவது, முஷரப் இஸ்லாமாபாத்தில் நடக்கும் உச்சிமாநாட்டுக்கு வாஜ்பாய் வர மறுப்பார் என்றே எதிர்பார்த்திருந்தார். வாஜ்பாயும் அதற்கு ஏற்றமாதிரியே முன்னுக்கு பின் முரணான அறிக்கையை வெளிப்படுத்தி வந்தார். குறிப்பாக சமாதான முயற்சிகள் பலவற்றைத் தொடக்கிய வாஜ்பாய், இருநாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்தைத் தொடக்கிவிட்டு, திடீரென விமானப் போக்குவரத்தைக் காலதாமதப்படுத்தினார். அவ்வாறு பேசுவதற்குத் தயார் என்றார். பின்னர் விட்டுக்கொடுப்புக்குத் தயாரில்லை என்றார்.

இவ்வாறு வாஜ்பாயும், துணைப் பிரதமர் அத்வானியும் மாறிமாறி முஷரப்பை குழப்ப- சில விட்டுக்கொடுப்புக்குக் தற்காலிகமாக முன்வந்தார். காஷ்மீர் பற்றிய பேச்சுக்கே இடமில்லையென்பதும், இரு தரப்பு அரசியலைப் பேசுவதில்லை என்றும் முஷரப் அறிவித்தார்.

இதனையடுத்தே வாஜ்பாயின் இஸ்லாமாபாத் விஜயம் பூரணமானதாக மாற்றப்பட்டது. அந்தவகையில் முஷர்ப்பின் பலம் தற்காலிகமாக அதிகரித்ததென்றே கூறலாம். அதாவது, தற்காலிக விட்டுக்கொடுப்பினால் உள்நாட்டிலும், உலகமட்டத்திலும் முஷரப் பலமான அரசியல் தலைவராக மாறியுள்ளார். பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலின் முன்னால் இந்திய தலைமையை அழைத்து ஓர் உச்சி மாநாட்டை நடத்துவதென்பது முஷரப்பின் தனிப்பட்ட பலத்தைக் காட்டுவதாகவே நோக்கப்படுகின்றது.

இவ்வாறு முஷரப் சவால்களை எதிர்கொண்டதுபோல், இந்தியர்களும் சார்க் உச்சி மாநாட்டின்மூலம் அடையவுள்ள அரசியல் நலன்களையும் நோக்குவோம்.

சார்க் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதென்பதைச் சாத்தியப்படுத்துவதில் வாஜ்பாய் - தென்னாசிய நாடுகளை ஒன்றிணைப்பதில் கணிசமான விருப்புக்களையுடையவராக உள்ளார். அத்தகைய ஒன்றிணைப்பு என்பது தென்னாசியாவின் சமாதானமும், சகவாழ்வும் ஆகும். ஏனெனில், வாஜ்பாயைப் பொறுத்தவரை அல்லது இந்தியாவின் ஆளும் தலைமையைப் பொறுத்தவரை 2020 ஆம் ஆண்டில் இந்தியாவை வல்லரசாக மாற்றுவதே நோக்கமாகும். அதற்கான அடிப்படை- பொருளாதார சுபீட்சத்திலும் இராணுவ, அரசியல் பலத்திலும் தங்கியுள்ளதென்பது தெளிவான உண்மையாகும். எனவே, பொருளாதார சுபீட்சத்தை இந்தியா அடைவதற்குப் பயங்கரவாதம் - அதிலும் குறிப்பாக எல்லை தாண்டிய பயங்கரவாதம் பிரதான தடையாகவுள்ளது. அதனை ஊக்குவிக்கும் வரிசையில் முதல்நாடாக தெற்காசியாவுக்குள் பாகிஸ்தான் இருப்பதால், பாகிஸ்தானுடன் சுமுக உறவை அரசமட்டத்தில் பேணுதல் சிறப்பானதென இந்தியா கருதுகிறது. அவ்வாறான முயற்சி தவறினால் போரைத் தவிர்க்க முடியாத அஸ்திரமாகப் பயன்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. அதிலும் பாகிஸ்தானுக்கு பின்னால் அமெரிக்கா மறைந்திருப்பது பற்றியும் இந்தியா கவனம் கொள்கிறது. இதனால், போரைத் தவிர்த்து ஒரு சமாதான உரையாடல் தந்திரத்தைப் பிரயோகித்து பாகிஸ்தானுடன் சுமுகநிலையை உருவாக்க இந்தியா விரும்புகிறது.

சார்க் மாநாட்டுக்குப் புறப்படமுன்பு, பாகிஸ்தான் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலும், பத்திரிகையாளர்களுடனும் வாஜ்பாய் உரையாடும்போதும் - பாகிஸ்தான் தலைவர்களுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நிகழாது எனக் குறிப்பிட்டிருந்தார். இது இரு தரப்பு அரசியல் விடயங்களை உரையாடக் கூடாது என்ற சார்க் அமைப்பின் கொள்கைக்காக மட்டுமல்ல, பாகிஸ்தானுடன் பேச முயன்றால் அது காஷ்மீர் பிணக்கில் போய் முடியுமென்பதற்காகவேயாகும். எனவே, மௌனம் காப்பதும், அதனூடாக அரசியலைக் கொண்டுசெல்வதும் இந்தியாவில் இலக்குகளாகவுள்ளன.

இந்தியா எப்படி சார்க் அமைப்பை பார்க்கிறது என்பதை விளங்கிக்கொள்ள தற்போதைய உச்சிமாநாட்டிற்கான வெளிவிவகார செயலர்கள் சந்திப்பே போதுமானது. சார்க் உச்சிமாநாட்டில் எடுக்கவுள்ள பிரதான நடவடிக்கைகளாக - பயங்கரவாதத்தை பரவவிடாது தடுப்பது, தடையற்ற வர்த்தக உடன்பாட்டை அமுல்படுத்துவது, வறுமை ஒழிப்பது ஆகிய மூன்று விடயங்களையும் முன்னிறுத்தியுள்ளது. முதலிரண்டும் முழுக்கமுழுக்க இந்தியாவுக்கு இலாபகரமானது. இந்தியாவின் குறிப்பாக எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பரப்பும் பாகிஸ்தானின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த அவசியமானது. தடையற்ற வர்த்தகத்தால் அதிக இலாபத்தினை அடையவுள்ள நாடு இந்தியாவாகும். அதிக உற்பத்தியையும், அதற்கான சந்தை வாய்ப்பையும் தேடிவரும் இந்தியா - தெற்காசிய வட்டத்தைப் பாரிய சந்தையாக மாற்றுகின்ற நிலையை இது சாதகமாக்கும். வெளிநாடுகளது தலையீடு, சந்தைக்கான ஊடுருவல் என்பன நிறுத்தப்படுவதுடன், சிறிய நாடுகளது உள்நாட்டு உற்பத்தியும், அதற்கான வாய்ப்புகளும் தடைப்படும். மாறாக தொழில்நுட்ப விருத்தியும், உற்பத்திப் பெருக்கமும், ஏனைய தெற்காசிய நாடுகளது உற்பத்திகளுடன் போட்டிபோடும் நிலையும் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

எனவே, சார்க் மாநாட்டுக்கான அடிப்படையில் இந்தியாவின் இலக்குகள் தனித்துவமானவையாக வளர்ந்துள்ளன. சார்க் அமைப்பின்மூலம் முஷாராப் தனது தனிப்பட்ட விருத்தியை உருவாக்க முயலும்போது, வாஜ்பாய் அதனை இந்தியாவின் விருத்தியாக மாற்றமுயலுகின்றார். அதற்குள் வாஜ்பாயினதோ, பாரதீய ஜனதாவினதோ அரசியல் அபிலாஷைகள் இல்லாமலில்லை என்றபோதும், இந்தியாவைப் பாதுகாப்பதில் அதிக கரிசனை கொண்டுள்ளார்.

சார்க் அமைப்பின் தற்போதைய வெற்றி- தீர்வையற்ற வர்த்தக உடன்பாடாகவே கொள்ளப்படுகின்றது. அது முழுமையான பொருளாதார சுபீட்சத்தை நோக்கியதாகும். முழு உலகத்திலும் இத்தகைய நடைமுறை முன்னெடுக்கப்படுவதுடன், உலக பொருளாதார ஒழுங்கமைப்புக்களின் வெற்றிக்கு அதுவே காரணமாகவுள்ளது. இதனால், தென்னாசிய வட்டகை உடனடியாக நிகழ்ந்துவிட்டாலும், எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியை நோக்கமுனையலாம். உடனடியாக இந்தியாவே அதிக லாபத்தையும், நன்மையையும் அடையும். இந்தியாவுடன் போட்டிபோடும் தொழில்நுட்ப விஞ்ஞான வலுவற்ற அரசுகளாகவே ஏனைய அரசுகள் பேணப்படுகின்றன.

எனவே சார்க் அமைப்பு - அரசியல் போட்டியற்ற, பகையற்ற அமைப்பாக எப்போது மாறுகின்றதோ அப்போதே முழுமையான வளர்ச்சியையும், விருத்தியையும் அடையும். இந்தியாவும், பாகிஸ்தானுமே சார்க் அமைப்பு என்பது போலுள்ளவரை சார்க் அமைப்பு எதனையும் சாதிக்காது. ■

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்*
*தண்பதத்தான் தானே கெடும்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### அதிகார பீடங்களை அழுத்தங்கள் அசைக்குமா?

"அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" எனத் தமிழில் ஒரு பழமொழியுண்டு. ஆனால் -

அழுத்தத்தின்மேல் அழுத்தம் கொடுத்தாலும் சிறிலங்காவின் அதிகாரபீடங்கள் ஒரு மில்லிமீற்றர் தூரம் தானும் நகருமா என்பது சந்தேகம்தான்.

சமாதானம் நோக்கிய நகர்வைப்பற்றித்தான் கூறுகிறோம்.

தேசத்தின் இன்றைய இன்றியமையாத அவசியத் தேவையானது - நிரந்தரமான அரசியல் தீர்வு, உறுதியான சமாதானம், நிலையான அமைதி மற்றும் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை மீதான உத்தரவாதம் ஆகியனவற்றை உள்ளடக்கிய கொள்கைகளின் விருப்பார்வமும், ஆத்ம சுத்தியுடனான செயற் றிறனும் கொண்டதான மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து கௌரவிக்க வல்லதான ஒரு அரசேயாகும்.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இத்தகைய தொலைநோக்குச் சிந்தனையுடன்கூடிய அரசியல் தலைமையானது இன்றுவரை அதற்கு கிடைக்கவில்லை என்பது துரதிர்ஷ்டமேயாகும்.

தேசத்தின் நலனைக்கூட தத்தம் சுய அரசியல் அபிலாஷைகளுக்காகச் சுலபமாக ஒரு மூலைக்குள் புறந்தள்ளிவிடும் அலட்சியம், சிறிலங்காவின் பிரதான அரசியல் தலைமைகளின் இயல்பான குணாம்சம் என்பதை எவருக்கும் விளக்கிக் கூறவேண்டிய அவசியம் இல்லை. சிறிலங்கா சுதந்திரம் அடைந்து அரை நூற்றாண்டைக் கடந்துவிட்ட போதிலும், அதன் அரசியல் சித்தாந்தமானது ஆனது இனவாதத்தையும், மதவாதத்தையும் அடிப்படையாகக் கொணடதாகவே எந்தவித மாற்றமும் இல்லாது தொடர்ந்து இருந்து வருகிறது.

இதுவே, இந்த நாட்டிற்குத் தொடர்ச்சியான அழிவுகள் ஏற்படுவதற்கும் காரணமாகவும் உள்ளது. இந்த நாட்டில் காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக உழைத்து, உண்டு, உடுத்து, உறங்கி வாழ்ந்த மக்களை - சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், இலங்கை சோனகர், இந்திய சோனகர், மலாயர், பறங்கியர் என வகைப்படுத்தி இனரீதியாகப் பிரித்து, இலங்கையர் என்ற தேசிய இனமொன்றை இல்லாதொழித்த அரசியல் அறிவீனத்தின் பின்னால் தொலைநோக்குச் சிந்தனையற்ற இனவாதிகளின் செயற்பாடுகளே இருந்தன.

இந்த செயற்பாடுகளைச் சிரமேற்கொண்டு இயக்கியவர்களில் பெரும்பான்மையோர் பௌத்த - சிங்கள இனவாத அரசியல் போக்காளர்களேயாவர்.

அவர்கள் சிறிலங்காவை ஒரு பௌத்த - சிங்கள தேசமாகவே முழுமையாக மாற்றிக்கொள்ளவே முழுமூச்சுடன் செயற்பட்டனர். அது ஒரு தனியான இரத்தக்கறை படிந்த வரலாறாகும்.

அந்த வரலாறு முடிவுறாத பெரும்பான்மைச் சமூகத்தின் இனவாத அரசியல் சக்திகள் முடிவுக்கு கொண்டுவர விரும்பாத ஒன்றாக இன்றுவரை தொடர்வதுதான், இன்னமும் இனப்பிரச்சினைக்கான நீதியானதும், உறுதியானதுமான தீர்வொன்றினை அரசியல்ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டமுடியாமைக்குக் காரணமாகும்.

சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இடையிலான அதிகார மோதலின் மூலநோக்கமும், சமாதானத்தை எந்தவகையிலாவது நிராகரிப்பது என்பதையே இலக்காகக்கொண்டது என்பதே உண்மையாகும்.

சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் எதுவுமே களையமுடியாதவையல்ல; தேசிய நலனை இருவரும் கருத்தில்கொண்டு பரந்த மனப்பான்மையுடன் ஒன்றிணைந்து செயற்படத் துணிவுகொண்டால், முரண்பாடுகளை - உடன்பாடுகளாக மாற்றிகொள்ளவும் முடியும்.

ஆனால், அவர்கள் அதற்கு எந்தவகையிலும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளத் தயாராக இல்லை என்பதையே அண்மைக்கால நிகழ்வுகள் அனைத்தும் உறுதி செய்கின்றன.

சிறிலங்காவில் சமாதானம் நிரந்தரமாக ஏற்பட - அமைதிப்பேச்சுக்களை முன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தைச் சுயமாக உணர்ந்து செயற்படவேண்டியவர்கள் -முரண்பட்டுக்கொண்டிருக்க, சர்வதேச சமூகம் அதை உணர்ந்துகொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முனைப்பாக இருப்பதுதான் விசித்திரமான விடயமாகும்.

ஜப்பான், கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் என அனைத்து நாடுகளும் முரண்படும் தரப்பினரை இணக்கத்திற்கு வந்து, சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்குமாறு சிறிலங்காவைக் கடந்த சில வாரங்களாக வலியுறுத்திவருவதை - சிறிலங்காவின் அதிகாரபீடங்கள் கண்டுகொள்வதாக இல்லை.

எல்லாவற்றிலும் மேலாக அமெரிக்கா கடந்தவாரத்தில் சற்றுக்கடுமையாகவே எச்சரிக்கை செய்யும் விதத்தில் சந்திரிகா - ரணில் இருவர்மீதும் கொடுத்துள்ள அழுத்தத்தைக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

இது தொடர்பாக அமெரிக்காவின் பிரதிப் பாதுகாப்புச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் - கடந்தவாரம் வெளியிட்ட அறிவுத்தல் - ஜனாதிபதி வட்டாரங்களில் அதிருப்தியான மன உணர்வை வெளிப்படுத்தியது தெரிந்தவிடயமே.

இப்போது, அதிகாரமோதலைக் கைவிட்டு, சந்திரிகாவும் ரணிலும் உடனடியாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டும் எனவும், தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்வதை அனுமதிக்கமுடியாதென்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலர் கொலின் பவல் இரு தரப்பினருக்கும் கடிதமூலம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. இது அறிவுறுத்தலோ, அச்சுறுத்தலோ எதுவாக இருந்தாலும், மந்தபுத்திகொண்ட இனவாத அரசியல் தலைமைகளின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதே இன்றைய பிரதான கேள்வியாகும்.

## நாடும் நடப்பும்




# அரசியலமைப்பின்படி 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும்!

## சட்டநிபுணர் கருத்து

(கொழும்பு)

அரசியலமைப்பின்படி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவேண்டும். இதற்குப் பின்னரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்கமுடியாது என்று சட்டத்தரணிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

அரசியலமைப்பின் உறுப்புரை 30 (2) ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்துகின்றது.

ஆறு ஆண்டுகளுக்குக் கூடுதலாகப் பதவியிலிருக்கவேண்டுமாயின், மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும், மக்கள் தீர்ப்பும் பெற்று 30 (2) உறுப்புரையை மாற்றியமைக்கவேண்டும். அவ்வாறு செய்வது இலகுவான காரியமல்ல. அவ்வாறு செய்யப்படவுமில்லை. ஆகவே, ஆறு வருட பதவிக்காலத்தை எக்காரணம் கொண்டும் அதிகரிக்கமுடியாது.

ஜனாதிபதியின் தெரிவை தேர்தல் ஆணையாளர் பிரகடனப்படுத்துவார். அப்பிரகடனத் திகதியிலிருந்து ஆறு வருடங்களுக்கு ஜனாதிபதி பதவியில் இருப்பார்.

32 (1) உறுப்புரையின் பிரகாரம் - அரசியலமைப்பின் நான்காம் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு சத்தியப் பிரமாணத்தை ஜனாதிபதி செய்யவேண்டும். சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே அவரது பதவியின் கடமைகளைச் செய்யமுடியும்.

தெரிவு செய்யப்பட்டு ஒரு மாதத்துக்குள் சத்தியப் பிரமாணம் செய்யப்படவேண்டும். ஆனால், சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதியிலிருந்து ஜனாதிபதியின் காலம் ஆரம்பமாகமாட்டாது.

பதவியிலுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர், ஒரு மாதத்துக்குக் குறையாமலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாமலும் தேர்தல் நடைபெறவேண்டும் என்று உறுப்புரை 31(3) விபரிக்கின்றது.

அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. மேற்கூறிய உறுப்புரை 31 (3) இற்குப் பின் புதிய உறுப்புரை 31 (3 அ) (அ) (1) கொண்டுவரப்பட்டது.

அவ்வுறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலம் தொடங்கி 4 ஆண்டுகள் முடிவடைந்த பின், ஜனாதிபதி விரும்பினால் மேலும் ஒரு தவணைக்குப் பதவி வகிப்பதற்காகத் தேர்தல் நடத்தலாம்.

புதிய உறுப்புரை 31 (3அ) (ஈ) இன்படி மேற்கூறியவாறு தேர்தல் நடத்தப்பட்டால் ஆறு ஆண்டுகளுக்குப் பதவியிலிருப்பார் என்று கூறுகின்றது.

ஜனாதிபதி ஒரு தவணையில் ஆறு ஆண்டுகள் பதவியிலிருக்கலாம். அக்காலத்தை கூட்டமுடியாது. முதலாவது பதவிக்காலம் தொடங்கிய 4 ஆண்டுகளின் பின் ஆறுவருட காலத்தைக் குறைத்து, இன்னுமொரு தேர்தலை நடத்தலாம்.

அவ்வாறு நான்கு ஆண்டுகளின்பின் தேர்தல் நடத்தும் பொழுது, இரண்டாவது தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்படும் பொழுது முதலாவது பதவிக்காலம் முடிவடைந்துவிடும்.

இரண்டாவது தவணைக்காலமான ஆறு வருடங்களோடு முதலாவது பதவிக்காலத்தின் மிகுதி வருடங்களையும் சேர்த்து பதவிவகிக்கமுடியாது.

ஜனாதிபதி சந்திரிகா 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாவதுமுறையாக பதவிக்கு வந்தவர். அவரது பதவிக் காலம் 2005 ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது. ஜனநாயக முறைப்படியும் இதுவே வழியாகும். ஆகவே, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என்றும் சட்டநிபுணர்கள் மேலும் கருத்துத் தெரிவித்தனர்.

# வலயம் 2 சமுர்த்தி வங்கி நிரந்தரக் கட்டடத்தில்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலயம் 2 இற்கான சமுர்த்தி வங்கியானது மிக விரைவில் தனது நிரந்தரக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சமுர்த்தி வங்கியானது தற்பொழுது கீரிமலை வீதி பண்டத்தரிப்பிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. தற்போது, இந்த வங்கிக்கான நிரந்தர கட்டட வேலைகள் பிரான்பற்றில் கொள்வனவு செய்யப்பட்ட நிரந்தர காணியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

வங்கியின் கட்டட வேலைகள் முற்றுமுழுதாக முடிவடைந்து வருவதால், இம்மாத நடுப்பகுதியில் சமுர்த்தி வங்கி நிரந்தரக் கட்டடத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்குடா கல்வி வலயத்தில் 12 பாடசாலைகள் ஆரம்பம்

(கல்குடா)

கல்குடா கல்வி வலயத்தில் இம்மாதம் முதல் 12 பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதற்கான அனுமதி மாகாணக்கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கல்வி வலய அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் புதிய பாடசாலைகள் வாக்ரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆண்டான்குளம், அம்பத்தனவெளி, சேனைக்குடியிருப்பு, குறிஞ்சாக்கேணி, வெருகல், தட்டுமுனை, இறால் ஓடை, மாவடி ஓடை ஆகிய எட்டுக்கிராமங்களிலேயே மேற்படி 12 பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (122)

# இரசாயன பசளைகள் விலை உயர்வு எதிர்த்து விவசாயிகள் போராட்டம்!

## விவசாயிகள் சங்கம் ஏற்பாடு

நீர் விற்பனை மற்றும் இரசாயன பசளைகளின் உயர்வு என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, விவசாயிகள் போராட்டங்களை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தினை நடத்த அகில இலங்கை விவசாயிகள் சங்கம் ஏற்பாடுசெய்துள்ளது.

நீர்விற்பனை மற்றும் இரசாயன பசளைகளின் விலை உயர்வு என்பவற்றினால் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு, நாட்டில் அமைந்துள்ள பிரதான நீர் நிலைகளின் மேல் பந்தல்களை அமைத்து அவற்றில் இருந்து எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இவற்றினைவிட, இரசாயன பசளைகளுக்கான மானிய முறை மீண்டும் அமுல்படுத்தப்படுகின்றபோதிலும் பசளைகளின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டித்தே இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# கணித, விஞ்ஞான ஆசிரியர் விசேட செயற்திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பதினோராம் தரத்தில் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு - எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்குப் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அத்துடன், இந்த விசேட செயற்திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் - தரம் 11 மாணவர்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் கேட்டுள்ளார். (122)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# தரணியெங்கும் தமிழர் தம் உரிமைக்குரலை கர்ச்சித்த மறத்தமிழன் குமார் பொன்னம்பலம்



"சாவு வரும் என உறுதியாகத் தெரிந்திருந்தும் போராடுவது போராளியின் குணம். அந்த வகையில் குமார் பொன்னம்பலம் ஒரு போராளியே"
**- இது எல்லாளன் (வன்னி) கூற்று-**

மாமனிதர் குமார் ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிங்கத்தின் குகைக்குள் வாழ்ந்துகொண்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முக்கியமாகச் செய்த பிரசாரம் என்னவெனில்- 'தமிழர் பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்வும், திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்ட வேண்டுமென்றும், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஒரே தலைமைத்துவம் என்றும், அவர்களுடன் பேசுவதன்மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்' என்பதே.

இந்த முடிவுக்கு அவர் வந்ததற்கு முக்கிய காரணம் - தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளை மறுத்து, மாறிமாறி ஆட்சி செய்து வந்த அரசாங்கங்கள் பல வழிகளைக் கையாண்டு, தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாறாக, பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டங்கள்மூலம் தமிழ் பேசும் இனத்தை அடக்கி ஒடுக்கி அழித்து செயல்பட்டதே.

இவரது இன்றைய நினைவு தினத்தில் பின்வருவனவற்றை நினைவுகூர விரும்புகிறேன்.

சிங்கத்தின் குகையில் புலியாக நிமிர்ந்த குமார் - இரும்புத் தமிழனாக வாழ்ந்தார்.

தமிழ் குழுக்களையும், சிங்கள இனவெறி அரசியலின் அடாவடித்தனங்களையும் அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்து, கொழும்பில் வாழ்ந்த ஒரேயொரு தமிழன் குமார் பொன்னம்பலம்.

இன அடக்குமுறைக்குள் அழிக்கப்படும் தமிழன் மீதான அக்கறையை, சிங்கள அரசியல் வாதிகளின் போலிச் சமாதானங்களைச் சுக்குநூறாக்கிப் பேசிய ஒரே தமிழ்க்குரல் குமாரினுடையது.

தென்னாபிரிக்க தொலைக்காட்சிக்குத் தமிழன் வந்தேறு குடிகள் என்று ஜனாதிபதி சந்திரிகா கொடுத்த நேர்காணலை - சகல ஊடகங்களுக்கும் அம்பலமாக்கிய சிம்மக் குரலோன் குமார் பொன்னம்பலம்.

இன்று சமாதானப் பேச்சுப்பற்றி முக்கியமாகப் பேசப்பட்டு வருகிறது. அவர் ஜனாதிபதிக்குப் பகிரங்கமாக எழுதிய கடிதத்தில் சமாதானத்தைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார் - 'பேச்சுவார்த்தை மேசையில் புலிகளை சந்திப்பதுதான் உங்கள் நேர்மையான நிலைப்பாடானால், விடுதலைப் புலிகள் கோழைகள், பயங்கரவாத கோழைகள் என்ற உங்களது ஆவேசப் பேச்சும், விடுதலைப் புலிகளை துடைத்தெறிய வேண்டுமென்ற உங்களது வலியுறுத்தலும் அந்த நிலைப்பாட்டுக்கு நிச்சயமாக உதவப்போவது இல்லை'.

சமாதானம் என்பது ஒரு போராட்டம். சமாதானம் என்பது ஒருபோதும் வெறுமனே கொடுக்கப்படுவதில்லை. ஒருபோதுமே அபகரிக்கப் படுவதுமில்லை. மற்றையவர்களுக்கு மதிப்பளிப்பதன்மூலமும், தைரியத்தினமூலமுமே சமாதானம் வெற்றிகொள்ளப்படுகிறது. சமாதானத்தைக் காண ஒவ்வொருவரிடமும் விழிப்புணர்ச்சியும், பற்றுறுதியும் தேவை. பலம் வாய்ந்தவர்களினால் திணிக்கப்படும் சட்டம் அல்ல சமாதானம். ஆனால், சகல மக்களினதும் சமத்துவம், கௌரவம் ஆகியவற்றை அத்திவாரமாகக் கொண்டதே சமாதானம்.

மாமனிதர் 'லக்கி கதிர்காமர்' எனக் குறிப்பிட்டு, முன்னாள் வெளிநாட்டு அமைச்சருக்குப் பகிரங்கக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்-

அமைச்சர் ஐயா, இலங்கையின் வட - கிழக்கிலுள்ள தமிழரும், உலகெங்கும் பரவியுள்ள தமிழரும், புலிப் போராளிகளும் கொழும்பு நடனமண்டபங்களில் நீங்கள் கொஞ்சிக் குலவுகின்ற தமிழர்களைப் போன்றவர்கள் அல்லர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். இவர்கள் நடந்துகொள்ளும் முறை வேறுபட்டது. எவரும் கையை முறுக்குவதை இவர்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். தன்மானம், மேன்மை, சுயமரியாதை, நீதி ஆகியவற்றுடன் கூடிய ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படுமாயின், அதனை இவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்கள். இந்த தீர்வுத்திட்டம் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடியதாய் இருத்தல் அவசியம்.

அன்னாருடைய இன்றைய நினைவுதினத்தில் - தமிழர் பிரச்சினை வெளிநாடுகளின் பங்கேற்புடன் சமாதானப் பேச்சு மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைக்கு ஒரு விடிவு காண்பதற்காகவும், அன்னாருடைய ஆன்மா சாந்தியடைவதற்காகவும், நமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாறாக நடப்பவர்களை நாம் எதிர்க்க முடியாவிட்டாலும், நாம் ஆதரிக்காமல் இருப்பதே நாம் செய்யும் பெரும் கைங்கரியமாகும்.

**க.மு.தர்மராசா**

## ஒரு கண்ணோட்டம்

# காணாமற்போன உறவுகளை தேடுபவர்களுக்கு புதிய ஆண்டில் நீதியான தீர்வு கிடைக்குமா?




**வடக்கு** - கிழக்கு பகுதிகள் எப்பொழுது விடுதலைப் புலிகள் கையிலிருந்து சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானதோ- அன்றிலிருந்து இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்படுதல், காணாமற்போதல், பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுதல் போன்ற பல கீழ்மைத்தனமான போக்குகள் ஆதிக்கம் செலுத்தத்தொடங்கின.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டை படைகள் முழுமையாகக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், சோதனைகள் போன்றவற்றின்மூலம் எத்தனையோ இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டு, அவர்கள்மேல் சொல்லில் வடிக்க முடியாத சித்திரவதைகளைச் செய்து வெளியில் விட்டதுபோக, இன்னும் எத்தனையோ பேருக்கு எங்கே? என்ன நடந்தது? என்ற வினாக்களின் விடைகளைக்கூட கண்டுகொள்ள முடியாத அளவுக்கு இந்தச் சிங்களப் படைகளின் கொடூரங்கள் வேதனைக்குரிய விடயமாகும்.

இராணுவப் படைகள் தங்களது உயிர்ச் சேதங்களையும், உடற் சேதங்களையும், ஆயுத, பொருட் சேதங்களையும் நிவர்த்தி செய்யும் முகமாகவோ அல்லது அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அரசியல் கட்சிகளின் ஆதரவோடும் இந்தக் காணாமற்போனோர் பட்டியல் நீண்டிருக்கலாம் என்றும் ஒரு சிலர் கருத்து தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகவே உள்ளது. எது என்னவாக இருந்தாலும், இந்தக் காணாமற்போனோரின் பட்டியலின் பக்கங்கள் அதிகரித்துச் செல்வதற்கு முதன்மைக் காரணியாகத் திகழ்வது - சிங்களப்படைகள் என்பதுதான் உண்மை.



1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவமுகாம் - விடுதலைப் புலிகளின் ஓயாத அலை - 1 இராணுவ நடவடிக்கை மூலம் நிர்மூலம் ஆக்கப்பட்டதன் பின்னர்தான், இந்தக் கீழ்த்தரமான போக்குகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை புள்ளிவிபரங்கள்மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது.

முல்லைத்தீவு இராணுவமுகாம் தரைமட்டம் ஆக்கப்பட்ட அந்த 1996 ஆம் ஆண்டு மட்டும் 201 பேர் காணாமற்போனார்கள் என்ற முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, பள்ளிச்சிறுமி கிருஷாந்தி குமாரசுவாமியின் கற்பழிப்பு படுகொலைச் சம்பவங்களும் வெளிச்சத்தில் அம்பலமானது யாவரும் அறிந்த விடயம். இந்தப் படுகொலைச் சம்பவம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டிருந்த யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பிவிட்டது மட்டுமல்லாது, உலகநாடுகள் பார்வையையும் யாழ்ப்பாணம் நோக்கி திருப்பிவிட்டது.

இவ்வாறாகக் காணாமற்போனவர்கள் என்று அரசினால் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் சிலர் உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டும், சித்தப்பிரமை பிடித்தநிலையிலும் - சிறைச்சாலைகளில் இருந்தும், வைத்தியசாலை விடுதிகளிலிருந்தும் வெளிப்படுவது மனதை வருத்துவதாகவே உள்ளது.

1996 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் - 2002 ஆம் ஆண்டு வவுனியா வைத்தியசாலையில் இருந்து இரண்டு கண்களும் தோண்டப்பட்ட கொடூர நிலையில் உறவினரால் மீட்கப்பட்டார். இவ்வாறு காணாமற்போன உறவுகள் மீட்கப்படுவது அவர்களைத் தேடித்திரியும் உறவுகள் வாயில் மண்ணை அள்ளிப்போட்டதுபோல இருப்பதும், தங்களது உறவுகளும் இவ்வாறுதான் எங்காவது இருப்பார்கள் என்ற ஐயத்தையும் ஏற்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும்.

காணாமற்போனவர்கள் வேதனை ஒருபுறமிருக்க, அந்த உறவுகளைத் தேடும் உறவுகளின் வேதனை சொல்லமுடியாது. தமது பிள்ளை வரவேண்டும். ஆசைக் கணவன் வரவேண்டும், அப்பா கிடைக்கவேண்டும், அண்ணா கிடைக்கவேண்டும்... என்று தேடும் உறவுகள் உண்ணவோ, உடுக்கவோ, உறங்கவோ எதிலும் ஆசைகளின்றி காணாமற்போன உறவுகள் திரும்பிவரவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு வாடி வதங்கி, எலும்பும் தோலுமாகக் காட்சி தருவது மட்டுமல்லாது, அந்தக் குடும்பங்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகவே உள்ளது.

**வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான விபரம் ஆண்டுரீதியாகத் தரப்பட்டுள்ளது. மொத்தமாக 234 முறைப்பாடுகள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

| ஆண்டு | முறைப்பாட்டு தொகை |
|---|---|
| 1995 | 03 |
| 1996 | 207 |
| 1997 | 19 |
| 1998 | 04 |
| 2002 | 03 |
| ஏனையவை | 04 |
| மொத்தம் | 234 |

காணாமற்போன உறவுளைத் தேடும் உறவுகள் - மனித உரிமைகள் ஆணைக்குழு, வெளிநாட்டு அமைப்புக்கள் போன்றவற்றில் முறையிட்டதனைத் தொடர்ந்து, விசாரணைகள் நடத்தப்படுகின்றபோதிலும், அந்த விசாரணைகள் மூலம் காணாமற்போனவர்கள் மீள்வார்கள் என்பது சந்தேகமாகவே உள்ளது.

சிலநேரம் உறவுகள் காணாமற்போனதுதான் அவர்களைத் தேடி என்ன பலன்? கிடைக்கப்போகிறார்களா என்று மனதை தேற்றிக்கொள்பவர்கள் இருக்கின்றபோதிலும், சிலர் காணாமற்போன எங்கள் உறவுகளுக்கு ஒரு முடிவைப் பெற்றுத்தாருங்கள் என்று கச்சேரி முன்பாக, நீதி அமைச்சு முன்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக மறியற் போராட்டங்கள் செய்துகொண்டிருப்பது மட்டுமல்லாது, நாட்டின் பிரதம மந்திரி, முக்கிய அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் போன்றவர்களைச் சந்திப்பதும், மகஜர்கள் கையளிப்பதும் தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் சில அரசியல்வாதிகளின் கருத்துரைகளையும், ஆறுதல் பேச்சுக்களையும் கேட்டு - காணாமற்போனவர் பாதுகாவலர் சங்கத்தினர் - கொழும்பு, நீர்கொழும்பு, கழுத்துறை போன்ற முக்கிய தென்பகுதிச் சிறைச்சாலைகளில் தேடியும் காணாது ஏமாற்றம் அடைந்ததும் உலகம் அறிந்த செய்தி.

மொத்தத்தில் இந்த தொலைந்துபோன உறவுகளைத் தேடித்திரியும் உறவுகளின் கண்களில் சொரியும் இரத்தக் கண்ணீரைத் துடைப்பதற்குப் பலர் முனைகின்றபோதிலும், சிலர் முட்டுக்கட்டைகளாக இருந்து அந்த உறவுகளை உயிர் இருக்க ஊனமாக்கிக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். ஆகையால், இந்த காணாமற்போன உறவுகளைத் தேடி அவர்களை கண்டுபிடித்துக் கொடுப்பது யார் பொறுப்பு?

**கி.கமலதாஸ்**

# ஈராக்கின் பஸ்ரா நகர் பகுதிக்கு பிரிட்டிஷ் பிரதமர் திடீர்விஜயம்!

பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர், ஈராக்கின் பஸ்ரா நகரில் உள்ள பிரித்தானியத் துருப்புகளை சந்திப்பதற்கு, ஆச்சரிய விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில், எகிப்தில் - சுற்றுலாப் பயணிகள் விமான விபத்தில் கொல்லப்படுவதற்கு முன், பிரயாணத்தை ஆரம்பித்த இடமான, 'சாம் எல் செய்க்' இல் தனது விடுமுறையைக் கழித்த பின்னர், அங்கிருந்து நேரடியாக பஸ்ரா நகரிற்கு ரொனி பிளேயர் விஜயம் செய்துள்ளார். இப்பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரித்தானியத் துருப்புக்கள் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த வருடம் யூலை மாதம் அதிகாரமுள்ள ஒரு ஈராக்கிய அரசிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கு முன் தாம் இதுவரை செய்த பணிகளையும், யூலைக்குப் பின் தொடரவுள்ள பணிகளைத் தெளிவுபடுத்துவதற்கே இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகவும் ரொனிபிளேயர் பி.பி.ஸியின் அன்டி ரியுமார் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரொனி பிளேயருடன் இணைந்து பிரயாணத்தை மேற்கொண்டுவரும் பி.பி.சியின் அரசியல் நிருபர் ரியுமார் மேலும் தெரிவிக்கும் போது, இம்மாத இறுதியில் பிரித்தானிய ஆயுத விற்பன்னர் கெலியின் மரணம் தொடர்பான விசாரணைகளின் முடிவுகள் தெரிவிக்கப்படுவதற்கு முன் தனது அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சியாகவும் இவ்விஜயம் அமைவதாக தெரிவித்துள்ளார்.



# ஏழு சார்க் நாடுகளின் தலைவர்கள் பாகிஸ்தான் மாநாட்டில் பங்கேற்பு



ஏசியான் அமைப்பைச் சேர்ந்த 7 நாடுகளின் தலைவர்களும், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஒன்றுகூடி - சுதந்திர வர்த்தகம், தீவிரவாதத்துக்கு எதிராக போராடுவது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒற்றுமைக்கான அமைப்பு என்பது, சுருக்கமாக சார்க் என அழைக்கப்படுகின்றது. மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் ஆரம்ப நாளன்று இந்திய, பாகிஸ்தான் பிரதமர்கள் ஒருவருக்கொருவர் நேரிடையாக பேச்சு வார்த்தையில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வமைப்பின் நாடுகளிடையே காணப்படும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் ஆராயப்பட்டது. பல மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும், கல்வி அறிவின்மை, உள்நாட்டுப் போர் ஆகியன முன்னேற்றத்தைத் தடைசெய்து வருவதாகவும் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவ்வமைப்பின் நாடுகள் ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்குவதெனவும், தமக்கிடையே நல்லுறவுகளை வளர்ப்பதெனவும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டன.

இம்மாநாடு இறுதியாக நேபாளத்தில் 2002 ஜனவரியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.




# செங்கடலில் வீழ்ந்த விமான சிதைவுகளை தேடும் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன!



செங்கடலில் விழுந்து நொருங்கிய விமானத்தை தேடும் பணிகளில் தீவிரமாக நடத்தப்பட்டுவருகின்றன. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த உல்லாசப்பிரயாணிகள், குழந்தைகள் உட்பட 148 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது எகிப்து நாட்டிற்கு சொந்தமான வள்ளங்கள் தேடுதல்பணியில் ஈடுபட்டுவருகின்றன. விரைவில் பிரெஞ்சும் இத்தேடுதலில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போயிங் 737 ரகத்தைச்சேர்ந்த இவ் விமானம் - கடல் மட்டத்திலிருந்து 1000 மீற்றருக்கு கீழ் கடலின் அடியில் அமிழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விமானம் கடலில் சிதறி அமிழ்நது போனதற்கு இயந்திரக்கோளாறே காரணமாக அமைந்தது.

இவ்விமானம் கடலின் மேற்பரப்பை அடையும் வரை உருக்குலையாது காணப்பட்டதாக நேரில் அவதானித்தவர்களின் கருத்தை போக்குவரத்து 'அமைச்சர் 'அகமட் சபிக்' தெரிவித்துள்ளார். மேலும் இவ்விமானம் 3000 அடி வரை விமான நிலையத்திலிருந்து உயரப் பறந்த பின்பே கீழ்நோக்கி விழத்தொடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கட்டுப்பாட்டுத்தளத்திற்கு எதுவித அறிவித்தலும் விமானியிடம் இருந்து கிடைக்கவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே பலரது இறந்த உடல்கள் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களில் பலர் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்பதும், அதிக அளவில் குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் சிக்கிய விமானம் 10 ஆண்டுகள் சேவையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும், இடையிடையே நோர்வேயில் அதன் பாகங்கள் பரிசோத்னைக்குட்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.




# நாஸா அனுப்பிய 'ஸ்பிரிட்' செவ்வாயில் தரையிறங்கியது

7 மாதங்களுக்கு முன் நாஸாவில் இருந்து அனுப்பப்பட்ட 'ஸ்பிரிட்' விண்கலம், செவ்வாய்க்கிரகத்தில் நேற்று தரையிறங்கியுள்ளதாகவும், இறங்கிய இடத்தின் பாதைகள் அமைந்துள்ள சூழலை படம்பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்கள் செவ்வாயின் தரைப் பிரதேசத்தை ஆராய்வதற்கென அனுப்பப்பட்டிருந்த இக்கலம், செவ்வாய்க்கிரகத்தில் காணபபடும் பள்ளங்களில் முன்னர் ஏரிகள் இருந்தனவா என்பதனையும் ஆராய்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.



கடந்த காலத்தில் இருமுறை செவ்வாய்க் கிரகத்தில் விண்கலங்களை இறக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்ட 'பீகில் 2' என்ற செவ்வாய்க் கிரகத்தில் இறங்க ஏற்பாடாகியிருந்த கலத்தின் நிலை இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

செவ்வாய்க் கிரகத்தில் இறங்கும்போது, ரேடியோ தொலைபேசியில் அதற்கான சமிக்ஞைகள் கிடைத்ததாகவும் இச்சமிக்ஞைகள் மூலம் பரசூட் சரியான நேரத்தில் விரிந்தது என்றும், மெதுவாக தரையில் இறங்குவதற்கேற்றவாறு காற்றுப் பைகள் செயற்பட்டதாகவும் நாஸா தெரிவித்துள்ளது.

தரையில் இறங்கி 20 நிமிடங்கள் வரை எதுவித தகவல்களும் கிடைக்காததால், நாஸா விஞ்ஞானிகள் மனத்தொய்வடைந்திருந்ததாகவும், பின் கலம் சரியாக செயற்படுவதற்கான தகவல்கள் கிடைத்ததும் நாஸா விஞ்ஞானிகள் ஆனந்தப் பரசவத்தில் தமது இருக்கையில் இருந்து துள்ளியெழுந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.



இக்கலம் மூலம் இரண்டு முக்கிய நோக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்கேற்றவாறு அதன் பாகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

செவ்வாயில் நீர் இருக்கிறதா என்பதையும் பாறைகளின் வடிவமைப்பையும் அங்கிருந்தவாறே பூமிக்கு அனுப்புவதற்கேற்றவாறு நுணுக்குக்காட்டிகளும், கற்களை அரைக்கும் சாதனங்களும் இக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஊர்சுற்றி எழுதுவது

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் இரு நாடுகளும் விடுதலைபெற்ற நாளிலிருந்துவரும் கசப்புணர்வை நீக்கி இரு தரப்புக்கிடையிலும் நட்புறவை ஏற்படுத்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முயற்சி செய்யப்போவதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து - சந்திரிகா அம்மையார் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் நட்புறவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடவிருப்பதாக இந்தச்செய்தி' தெரிவிக்கிறது.

1962 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான எல்லையில் மோதல் ஏற்பட்டது. இது இந்திய - சீனப்போராக உருவெடுத்தது. உலக நாடுகளும் குறிப்பாக ஆசிய நாடுகளும் இந்திய - சீன மோதல் கண்டு அச்சம் கொண்டன.

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் சீனப் பிரதமர் சூ. என். லாயும் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்கள். 'இந்தி - சீனி பாய் பாய' என்று இருவரும் கைகோர்த்து நட்பை வெளிக்காட்டிக் கொண்டவர்கள்

பஞ்சசீலக் கொள்கையொன்றை (ஐந்து அம்சங்களைக் கொண்ட கொள்கை) இருவரும் உருவாக்கிப் பிரகடனப்படுத்தியவர்கள். ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் மற்றொரு நாடு தலையிடக்கூடாதென்பதும், இந்தப் பஞ்சசீலக்கொள்கைளில் ஒன்று.

இந்த நிலையில், இந்திய எல்லைப் பகுதியில் சீனப்படைகள் நுழைந்து சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளதாக இந்தியா குற்றஞ்சாட்டியது. மக்மோகன் எல்லைக் கோட்டை சீனா தாண்டிவிட்டதாக இந்தியா குற்றம் சாட்டியது.

சீனாவோ, தாங்கள் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழையவில்லையென்றும், தங்கள் பிரதேசத்தில்தான், தங்கள் படைகள் இருப்பதாகவும் கூறியது.

இரு தரப்புக்கிடையிலும் கசப்புணர்வு வளர்ந்தது. இதேசமயம் பாகிஸ்தானுக்கும், சீனாவுக்குமிடையில் நட்புறவு வளரத்தொடங்கியது.

எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற போக்கை சீனாவும், பாகிஸ்தானும் பின்பற்றுவதாக இந்தியர்கள் கூறிக்கொண்டனர். சீனாவுடன் பெரிய போருக்கு இந்தியா தயாரானது. இந்தியர்களின் தேசாபிமானம் கட்டியெழுப்பப்பட்டது.

இந்தச் சமயத்தில் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க - இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் சமரசம் செய்துவைக்க முன்வந்தார்.

புதுடில்லிக்கும், பீஜிங்குக்கும் சிறிமா அம்மையார் அடிக்கடி பறந்து திரிந்து, சமாதானப் பேச்சுக்கள் நடத்தினார். நடுநிலை நாட்டுத் தலைவர்களுடனும் பேசினார். யூகோஸ்லாவியாவுக்கும் போய்ப் பேசினார்.

சிறிமாவின் பேச்சு முயற்சியும் சீனாவுக்குச் சார்பாக இருப்பதாக இந்தியாவில் கருத்து நிலவியது. என்றாலும், இருபெரும் நாடுகளும் போரில் இறங்குவது பெரும் ஆபத்தாக முடியுமென்ற உலக நாடுகளின் அச்சத்தை இந்தியா உணர்ந்தது.

இதனால், இந்திய - சீன எல்லையில் போர் நிறுத்தம் செய்வதில் சிறிமா அம்மையார் எடுத்த முயற்சி வெற்றியளித்தது. இந்திய-சீன எல்லைப்போர் இரு நாடுகளுக்கும் இடையில் பெரிய போராகப் பரவாமல் தடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சிறிமா அம்மையார் இலங்கையிலும் வெளிநாடுகள் சிலவற்றிலும் சமாதானத் தேவதையாக சில காலம் வர்ணிக்கப்பட்டார்.

'இப்போது சார்க் மாநாட்டுக்காக பாகிஸ்தான் சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அம்மா வழியில் சமாதானத் தேவதையாக விருப்பம் வந்திருக்கலாம' என்றார் நண்பர்.

அது நல்லதுதான். பாகிஸ்தானில் போய் இறங்கியபின்பு அவர் பேசுவது வித்தியாசமாகத்தான் இருக்கிறது.

எல்லாம 'சதிதான' இங்கே உள்நாட்டில் பிரதமர் ரணிலுடன் சமரசமாகப் போகமுடியாமல் முறுகிக்கொண்டிருக்கும் அம்மையார் - இந்திய - பாகிஸ்தான் தகராறில் சமரசம் செய்துவைக்கப் போகிறாராக்கும் என்றார் நண்பர்.

'கூரை ஏறிக்கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தத்துக்கு வழிகாட்டுகிற கதைதான'!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




"கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினார்கள் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள்...."

"என்ன மணியம் கம்பராமாயணப் பாடல் வரிகளை கண்டபடி மாத்திப் படிக்கிறாய்...?"

"நான் ஒன்றையும் மாத்திப் படிக்கேல்ல கனகண்ணை. இப்ப ஜனாதிபதி சந்திரிக்காவினதும் பிரதமர் ரணிலினதும் நிலையை நினைச்சுப்பார்த்தன்...இந்த ராமாயணப் பாடல் தான் நினைவுக்கு வந்தது... அதுதான்...!"

"என்ன அவை கலங்குற அளவுக்கு நடந்துபோச்சாம்..?"

"உனக்கு சேதி தெரியாதே...! போன கிழமை அந்தக்கால எம்.ஜி.ஆர் பட வில்லன் ஜஸ்டின் போலத் தோற்றமுள்ள ரிச்சார்ட் ஆர்மிரேஜ்... அது தான் அமெரிக்க வெளியுறவுச் செயலர்...அம்மணியையும், ஐயாவையும் அரசியல் சண்டையை கெதியா விட்டுட்டு சமாதான பேச்சுக்களை தொடங்கச்சொல்லி ஒரு மிரட்டல்பாணி அறிவிப்புச் செய்தாரெல்ல..."

"ஓமோம் இப்ப அந்த அமெரிக்காவின் பாதுகாப்பு செயலர் கொலின் பவலே...இந்த அரசியல் நெருக்கடி தொடர்வதை இனிமேலும் அனுமதிக்கமுடியாது என்று ரண்டுபேருக்கும் கடிதம் அனுப்பிப்போட்டாராம்...!"

"அடி சக்கே...பிறகு..."

"பிறகென்ன...அழுத்தத்தின் மேல் அழுத்தமாக அம்மணிக்கும், ஐயாவுக்கும் அமெரிக்கா குடுக்குது போலைகிடக்கு... அதுதான் கடன் பட்டார் நெஞ்சம் போல்... என்று பாடினனான்.."

"அப்ப அமெரிக்காவிட்டே கடன்பட்டால் நிலைமை இப்பிடித்தான் என்று சொல்லுறாய் அப்படித்தானே...?"

"பின்னை...சண்டைக்கு கடன்பட்டால்... சமாதானமென்று சொன்னால் உடன்படத்தானே வேண்டும்?"

தெருவிரசி

# அரசியல் ஏமாற்றம் தொடர்ந்தால் தமிழர்கள் பிரிந்து செல்வது உறுதி!

## தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு

அரசியல் ஏமாற்றங்கள் தொடருமானால், தமிழர் பிரிந்துசெல்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும் என, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் - நேற்று யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் புதிய நிர்வாகக் குழுத் தெரிவு இடம்பெற்றது. தொடர்ந்து சில குழுத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதன்படி -

கடந்த 50 வருடகால அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழர் வாழ்வின் பரிமாணமாகத் தோற்றம் பெற்றதே ஆயுதப் போராட்டமாகும். இந்த ஆயுத போராட்டம் உச்சமடைந்த நிலையிலேயே இன்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்தும் ஏமாற்றங்களே தமிழர்களுக்கு மிஞ்சும் நிலை உருவாகி வருகின்றது. இன்றும் இத்தகைய ஓர் நிலையே காணப்படுகின்றது. இந்தநிலை நீடிக்குமானால், தமிழர் பிரிந்துபோகும் நிலையைத் தவிர வேறுவழி எதுவும் கிடையாது. அதனையே நாம் முன்னெடுப்போம். இதனைக் கருத்தில் கொண்டு அரசு சமாதான நடவடிக்கைகளை உடன் முன்னெடுக்க வேண்டும்.

எமது மக்கள் - அவர்களது, சொந்த வீடுகளில் வாழ்வதற்கு விதிக்கப்பட்டுவரும் தடைகள் நீக்கப்பட்டு, அவர்களின் வாழ்விடங்களை மீண்டும் ஒப்படைக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடற்தொழிலில் ஈடுபடும் எமது மக்கள் படும் இன்னல்கள் சொல்ல முடியாதவை. அவர்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

சர்வதேச மட்டங்களுக்கு முரணான வகையில் தமிழ் இளைஞர்கள் பலர் மனித உரிமைகள் மதிக்கப்படாது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலைக்கு அரசு உடன் நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

காணாமற்போனோர் சம்பந்தமான உண்மை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, உறவுகளை இழந்து நிற்கும் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க, அரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் - போன்ற தீர்மானங்களே நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், நடைமுறையில் உள்ள யாப்பை மாற்றுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

நேற்றைய நிர்வாகக் குழுத் தெரிவின்படி இந்தக் கட்சியின் தலைவராக மீண்டும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவுசெய்யப்பட்டார். சிரேஷ்ட உபதலைவராக கலாநிதி நா.குமரகுருபரனும் பொதுச் செயலாளராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், பொருளாளராக கே.எம்.தர்மராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைவிட ஆறு உப தலைவர்கள், இணைச் செயலாளர், நிர்வாகச் செயலாளர், பிரசாரச் செயலாளர், துணைப் பொருளாளர் ஆகியோருடன் 15 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ப)

# சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்குச் சகல கட்சிகளும் தமது வேற்றுமைகளைக் களைந்து ஒன்றிணைந்து செயற்பட உறுதி கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் நடைபெறும் 12 ஆவது சார்க் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் நடக்கும் ஆயுத மோதலைத் தீர்ப்பதற்கு எனது அரசாங்கம் - 1994 ஆம் ஆண்டு சமாதான முயற்சியை ஆரம்பித்தது. அதன் பின்னர், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், தற்போதைய அரசாங்கம் சமாதான முயற்சியை ஆரம்பித்தது. அதுவும் சில சிக்கல்கள் காரணமாகத் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் இறைமை, தன்னாட்சி, தேசிய பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டே நாம் சமாதான முயற்சியில் ஈடுபடுகின்றோம்.

இலங்கையிலுள்ள இருபெரும் அரசியற்கட்சிகளின் நடவடிக்கைகளாலேயே தற்போதைய நெருக்கடிநிலை தோன்றியுள்ளது. இருந்தாலும் சகல கட்சிகளும் தமது வேறுபாட்டினைக் களைந்து சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல உதவுவார்கள் என நான் நம்புகின்றேன்.

அத்துடன், விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் செய்துள்ள போர் நிறுத்த உடன்படிக்கை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலை....

வரும் முதலாம் தவணை விடுமுறைக்காக ஏப்ரல் 2 ஆம் திகதி மூடப்படும். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை விடுமுறை மார்ச் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட இருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கண்காணி...

வந்த கேட்ஸ்பர் கடந்த முதலாம் திகதிமுதல் தலைமைப் பதவியை ஏற்றுள்ளார்.

இந்தக் குழுவில் தற்போதைய 10 உறுப்பினர்கள் பணியாற்றிவருகின்றனர். இவர்களில் ஐவர் கடற் கண்காணிப்பாளர்களாக கடமையாற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு...

புலிகள் கொள்வனவுக் கட்டளை வழங்கியிருப்பதாகவும், இந்த நிறுவனம் சர்வதேச ரீதியாகப் பல்வேறு போராளிக்குழுக்களுக்கும் ஆயுதங்களை விநியோகித்து வருவதாகவும் பிரெஞ்சு இராணுவ நிபுணர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும்.....

நிராகரித்திருந்ததுடன் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களையும் வழங்குமாறு கோரியிருந்தது. சார்க் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் பிரதமருடனான பேச்சுவார்த்தையை நடாத்துவாரென அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மிதிவெடியில் சிக்கிய...

கைவிடப்பட்ட இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள காவலரண் ஒன்றிற்கு அருகில், வீழ்ந்து கிடந்த பனை ஓலை ஒன்றை எடுப்பதற்காகச் சென்ற சமயம், அப் பகுதியில் மறைந்து கிடந்த மிதிவெடி ஒன்றை மிதித்ததில் அது வெடித்துள்ளது.

இதனால் இடதுகாலை இழந்ததுடன் அவரது உடலிலும் சிறு சிறு காயங்களும் ஏற்பட்டுள்ளன. இச் சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. (121)

## வவுனியா துப்பாக்கி....

கொண்டு செல்லப்படும் வழியிலே அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 6 மாதத்துக்கு முன்னர்தான் வவுனியாவில் குடியமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொல்லப்பட்டவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவினை வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் பிறப்பித்தார். இவரது மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றிரவு 7.30 மணியளவில் வவுனியா பண்டாரிக்குளப் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், இது தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. (03)

## அடுத்த ஜனாதிபதி....

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில்,

இரகசியமாக ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் எடுத்திருந்தது ஒரு நகைச்சுவையான கருத்து எனவும், 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டேயாக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் பீரிஸின் இந்தக் கருத்தை உறுதிப்படுத்திய தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க, அரசியலமைப்பின்படி ஜனாதிபதி சந்திரிகா ஆறு ஆண்டு வரை பதவி வகிக்கலாம். 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

1999 ஆம் ஆண்டு இறுதியாக ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்றதென்பதால் அந்தத் தினத்தில் இருந்து ஆறு ஆண்டுகள் கழித்து - 2005 ஆம் ஆண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மக்களை ஏழைகளாக்கியுள்ளன!

## ரம்புக்கல்ல விபசி தெரிவிப்பு

(கொழும்பு)

பதவிக்குவந்த அரசாங்கம் வெளிநாட்டு உதவியை நம்பியிருந்து மக்களை ஏழைகளாக்கியுள்ளன என்று பிரபல பௌத்த மத குருவான, அதி சங்கைக்குரிய ரம்புக்கல்ல விபசி தெரிவித்தார்.

கண்டியைச் சேர்ந்த வர்த்தகப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்த போது மகாநாயக்கர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

காலஞ்சென்ற டி.எஸ்.சேனநாயக்க போன்ற தலைவர்களின் அடிச்சுவடுகளை நாடு பின்பற்றி, பொருளாதார அபிவிருத்திக்கு உள்ளூர் வளங்களைப் பேணவேண்டும்.

ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் இடையில் அரசியல் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நாடு பெரும் சிக்கலை எதிர்கொள்கிறது. நாடு ஒரு தனித் தலைவரைக் கொண்டிருக்கவேண்டும். காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பே தற்போதைய அரசியல் சிக்கலுக்குக் காரணம் இதனால், இந்த அரசியல் யாப்பு தாமதமின்றித் திருத்தப்படவேண்டும்.

வெளிநாட்டு உதவிகள் அவசியமானவைதான். ஆனால் அவற்றை முழுமையாக நம்பி எமது சுயத்தை இழக்கக்கூடாது என்றும் மகாநாயக்கர் மேலும் தெரிவித்தார். (01)

# வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்!

யாழ். ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்ற இனந்தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்காகி, படுகாயமடைந்தநிலையில் நேற்று நள்ளிரவு யாழ்போதனா வைத்தியசாலையில் குடும்பஸ்தர் ஒருவர் அனுமதிக்கப்பட்டார்.

மட்டக்களப்பைச் சொந்த முகவரியாகக் கொண்ட நவரட்ணம் ஆனந்தராசா (வயது 35) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

இவர் நேற்றைய தினம் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்தின் ஐந்துசந்திப்பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு வந்திருந்தார்.

நேற்றுஇரவு மதுபானசாலை ஒன்றுக்கு சென்று மதுஅருந்திவிட்டு உறவினரின் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தபோது, இரவு 11 மணியளவில் அவரை வழிமறித்த சிலர் வாளால் வெட்டியதுடன் கொட்டன் தடியாலும் தாக்கியுள்ளார்கள்.

கடுமையாகத் தாக்கப்பட்டு, தலை, கை முதலான பகுதிகளில் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் தற்போது அங்கு சிகிச்சைபெற்று வருகின்றார். (121)

A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 10
சனி காலை 8 மணி
DMI
யாழ். நகர்

பதவி வெற்றிடம்
☆ சிற்றூழியர் (ஆண்கள் மட்டும்)
☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள் மட்டும்)
☆ பக்க வடிவமைப்பாளர் - Page Maker
(இருபாலாரும்)
மேற்படி விண்ணப்பங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சான்றுப் பத்திரங்களுடன் 'நமது ஈழநாடு' அலுவலகத்திற்கு கடமை நேரத்தில் நேரடியாகச் சமுகம் தரவும்.
ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.